# துருவ பிரஹ்லாதர்

திருவள்ளூர் வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

சேலை - சகதேவ முதலியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1927

ரெஜிஸ்தர் செய்தது]  [விலை 4 அணா

Printed at the "Aurora Press," Madras.

# முன்னுரை

ஸ்ரீதரன் அருள் சின்னஞ் சிறு வயதிலேயே கைவரப் பெற்றுத் தமது பெற்றோரும் அப் பரந்தாமன் திருவடிகளை யடைய அவர்கட்கு அறிவுறுத்தி எவ்வுலகும் போற்ற ஏற்றங் கொண்ட இருமுது முனிவர்கள், துருவ பிரகலாதர் தம் வரலாறுகள் இச் சுவடியின்கண் எழுதப்பட் டிருக்கின்றன. இவைகளிற் கதைப் போக்குச் சிதையாமற் புராண சரிதைகளை யொட்டியே சிற்சில விடங்களிற் சிறுவர் மனோ பாவனைக்குப் பொருந்துமாறு காலப்போக்கை யனுசரித்துக் கருத்துக்களைச் சிறிது மாற்றி எழுதியுள்ளேன் அவைகளை அமைதி நோக்கித் தமிழுலகம் தயை புரிந்து அங்கீகரிக்குமாறு எல்லாம் வல்ல பெருமானை ஏத்தி நிற்கின்றேன்.

ஈக்காடு,
26-2-'25. } சே. சகதேவன்.



முயற்சி திரு அளிக்கும்

# துருவன்

## 1. புத்திசாலிப் பிள்ளை

ஆத்திசூடியில் அருமையான ஔவையார் வாக்கு ஒன்றுண்டு: **ஊக்கமது கைவிடேல்** என்பது அது. உள்ளத்தில் சோர்வு அடையாமல் உற்சாகத்துடன் தொட்ட வேலையை முட்டின்றி முடித்தலே ஊக்கம் எனப்படும். ஒருவன் இளமை முதல் இறக்கும் வரை ஊக்கத்தையே உடைமையாகப் பெற்றிருக்கவேண்டும். இவ் வுடைமை இன்றேல் மற்று எவ் வுடைமையும் உடைமை ஆகாது. ஊக்கத்தை உடைமையாக உடையவர்கள் "பொருளை இழந்தோம்" என்னும் துன்பத்திற்கு ஆளாக மாட்டார்கள். ஊக்கம் உடையவனிடம் செல்வம் தேடிவந்து சேரும். நீரின் அளவே ஆம்பல் நீள்வது போல மக்கள் ஊக்கத்தின் அளவே அவரது உயர்ச்சி ஓங்கித் தோன்றும். கொடையால் அடையும் இன்பம் ஊக்கம் இல்லாதவனுக்கு ஏது? மேலும் அவனுக்கு உடல் வலியும் மனோதிடமும் எங்கிருந்து வரும்? ஊக்கம் குன்றி யல்லவா கூர்மையான கோட்டையுடைய யானையும் புலிக்குப் பயப்படுகின்றது? சோம்பேறிகள் தங்கள் குடியைத் தாங்களே பொன்றச் செய்வர். சோம்பேறித்தனமும் தாமதமும் மறதியும் தூக்கமும் மனிதர்களுக்கு இன்பம்போல் தோன்றித்

துன்பத்தில் வீழ்த்திவிடும். மாளாத மண்ணும் பொன்னும் ஊக்கம் குறைந்தவழி இருந்த இடம் தெரியாமற் போய்விடும். ஊக்கம் இன்மை நாட்டார் பழிக்கு ஆளாக்கும். முயற்சியில்லாதவன் பிறருக்கு உபகாரியாக முடியாது. ஊக்கமுடையவன் தனக்கு இன்பத்தை வேண்டாமல் வினை முடித்தலையே வேண்டித் தன்னைச் சூழ்ந்தவர்களுடைய துன்பத்தைத் தாங்க ஒரு தூண் போல் நிற்பான். ஊக்கத்தோடு உழைத்து வேண்டியபடி பயன் பெறான் ஆயினும் உலகம் பழிக்காது. விதிப் பயன் குறைவாக இருந்தாலும் முயற்சி மெய்வருத்தக் கூலி தராமற் போகாது. விடா முயற்சி விதியையும் உதைத்துத் தள்ளும் என்பார் பெரியோர். ஐவிரண்டாண்டும் முற்றாத மைந்தன் ஒருவன் மனத்துயரடைந்து அதை மாற்றத் துணிந்து, விடாமுயற்சி மேற்கொண்டு உலகத்தில் எவரும் அடையாத பெரும் பாக்கியத்தைப் பெற்ற ஒரு வரலாற்றை இங்குக் கூறுவாம்.

இப் பரத கண்டத்தில் வடமேற்கே கூர்ஜ்ஜரம் என்னும் நாடொன்றுண்டு. அதற்கு வடமதுரை தலைநகர். அதில் உத்தான பாதன் என்னும் மனுகுலத்து அரசன் ஒருவன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனுக்கு மனைவியர் இருவர். மூத்தவளிடம் துருவன் என்பவனும், இளையவளிடம் உத்தமன் என்பவனும் பிறந்தார்கள். இவர்களில் துருவனே வயதில் மூத்தோன்.

மனைவியர் இருவரும் வெவ்வேறு அரண்மனைகளில் தனித்தனியே வாழ்ந்துகொண்டு இருந்தனர். அவ் வரண்மனைகள் ஒன்றுக்கொன்று அணித்தாகவே அமைந்திருந்தன. அரண்மனைகளுக் கெதிரில் விளை

யாட்டு மைதானம் ஒன்றுண்டு. காலையிலும் மாலை யிலும் துருவனும், உத்தமனும் அங்குச் சென்று தங்களுக்கு இஷ்டமானபடி விளையாடுவர். மந்திரி பிரதானி முதலான பிரபுக்களின் பிள்ளைகளும் உடன் கூடியிருப்பர். காற்பந்து, கைப்பந்து, கண்மூடி, ஊஞ் சல், ஓட்டம் முதலிய ஆட்டங்களை மிகக் கண்ணும் கருத்துமாய்க் களிப்புடன் ஆடுவர். துருவனும் உத்த மனும் எப்போதும் ஒரு கையிற் சேர்ந்திருப்பர். விளை யாட்டில் உத்தமன் தவறி விழுந்தால் துருவன் ஓடி எடுப்பான். தம்பியின்மீது மற்றப் பிள்ளைகள் விளை யாட்டில் குற்றங்கண்டு கோபித்தால், துருவன் அவர் களை அதட்டித் தம்பிக்குத் துணையாகப் பரிந்து பேசு வான். துருவன் உத்தமன்மீது எவரும் கைவைக்கப் பார்க்க மாட்டான். துருவன் ஏதோ காரணத்தால் மைதானத்துக்கு வராத நாட்களில் மற்றப் பிள்ளைகள் உத்தமனை, அவன் யாவர்க்கும் சிறியவன் ஆதலால், விளையாட்டில் வேடிக்கையாக அடிப்பதும் பிடிப்பதும் அலட்சியமாகப் பேசுவதும் உண்டு. அவற்றை உத்த மன் மறுதினமே அண்ணனிடம் சொல்லிக் கொள்வான். துருவன் உடனே அந்தப் பிள்ளைகளை அதட்டி வெருட்டி ஆக்கினையும் செய்வான். மற்றப் பிள்ளைகள் மைதானத் திற்கு விளையாட வாராதபோது துருவனும் உத்தமனும் தங்களுக்குத் தோன்றியபடி தனியே விளையாடுவர். சில நேரம் மரத்தினடியில் உட்கார்ந்து மனோபிஷ்டப்படி பேசிக்கொண்டிருப்பர். துருவன், தன் தாய் தனக்குச் சொல்லிக் கொடுத்திருந்த கதைகளையும் புத்திமதிகளை யும் தன் தம்பிக்குச் சொல்லிக் கொடுப்பான். இவ்வாறு இவ் விருவரும் இன்பமாகவே இளம் பருவத்தைக் கழித்து வந்தனர்.

## 2. பேதைப் பிதா

ஒருநாள் மாலைப்போதில் உத்தானபாதன் இளையாளுடன் அரண்மனைக்குப் பக்கத்திலிருந்த நந்தவனத்திற் சென்று உல்லாசமாய் உலவி ஓரிடத்தில் தனக்கென்று அமைக்கப்பட்டிருந்த பீடத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். துருவனும் உத்தமனும் மைதானத்தில் விளையாட்டயர்ந்து வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டே நந்தவனத்திற் புகுந்தார்கள். இருவரும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது பீடத்தின்மீதிருந்த பிதாவையும், அண்டையிலிருந்த சிற்றன்னையையும் கண்டார்கள். உத்தமன் உடனே ஓடி மன்னன் மடியில் உட்கார்ந்துகொண்டான். துருவனும் தன்னையறியாத மகிழ்ச்சிகொண்டு தானும் அவ்வாறே செய்ய வெகு அவசரத்துடன் அரசன் அண்டையிற் கிட்டினான். இதைக் கண்ட இராஜபத்தினிக்கு என்றைக்கும் இல்லாத கோபம் எழுந்தது.

**சிற்றன்னை** — துருவா, என்ன இது! நில்! நில்! எடுத்தடி வைக்காதே, ஏறப் பார்க்காதே, உத்தமன் தாதைமேல் உன் கையை வைக்காதே! உடனே இந்த நந்தவனத்தைவிட்டு ஓடிப்போய்விடு.

**துருவன்** — என் அருமைத் தாயே, என்ன இது! எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!

**சிற்.** — உனக்கு விளங்கவேண்டிய அவசியமில்லை, போ என்றாற் போய்விடு; நிமிஷமேனும் நீ இங்கு நிற்கலாகாது, கடுக நட.

**துரு.** — தாயே! என் பிதாவின் மடியில் யான் ஏறி உட்காரலாகாதோ? அது தங்களுக்கு மகிழ்ச்சியைத் தாராதோ?

சிற். — கூடவே கூடாது! அந்த மகிழ்ச்சி எனக்கு இகழ்ச்சியே யாகும். உன்னிஷ்டம் இங்கு நிறை வேருது; ஏறுமாருகப் பேசாதே; நீ எனக்குப் பிள்ளை அல்லை என்பதை எண்ணி நட.

திரு. — தாயே, என்றைக்கும் இல்லாத எண்ணம் இன்றைக்கு எப்படி என் மனத்தில் உதிக்கும்? பழக்கம் கொடியது அல்லவா? தாங்கள் என் தாயென்பதும், உத்தமன் என் தம்பி என்பதும் என் நினைவைவிட்டு நீங்கா! அதை ஏன் தாங்கள் மாற்றவேண்டு மென்கிறீர்?

சிற். — புத்தி யில்லாதவனே! அந்த எண்ணத்தினு லல்லவா நீ இப்போது உத்தமனோடு சமானமாக அரசன் மடியில் அமரப் பார்க்கின்ருய்? அந்த ஏட்டைத் தள்ளு; நான் உனக்குத் தாயல்லேன்; உத்தமன் உனக்குத் தம்பி யல்லன். அந்த எண்ணத்தை உன் மனத்தி னின்றும் அடியோடு அகற்றிவிடு; இவ்விடத்தையும் விட்டு உடனே அகன்றுவிடு; நின்ருல் கதி வேருகும்.

திரு. — தாயே, தாங்கள் என்னை இவ்வாறு வேருகக் கொள்வீர்க ளென்று நான் மறந்தும் நினைக்கவில் லையே! மன்னனைத் தொடவேண்டா மென்கின்றீர், உத்தமனைத் தம்பியல்ல னென்கின்றீர், உங்களைத் தாயல்லீ ரென்கின்றீர்! நான் யாரென்று எனக்குத் தெரிய வில்லையே! நான் திக்கற்ற பிள்ளையோ!

சிற் — ஆமாம், அதற்கென்ன சந்தேகம்! பூனைக்கும் புலிக்கும் எவ்வளவு தூரம்! நத்தி நத்தி வந்

தானும் உத்தமனுக் கொப்பாவையோ நீ! தாயே தாயே என்று பேய்போலப் பிதற்றினாலும் நீ எனக்குப் பிள்ளையாவையோ? நீ வேறொருத்தி வயிற்றிற் பிறந்தவ னென்று உனக்கு ஏன் தெரியாது? நீ என் வயிற்றிற் பிறக்கவில்லை என்று இன்றைக்குத் தெரிந்துகொள். என்னை இனிமேல் தாய் தாயென்று விளித்து இளிக்காதே. நான் சொல்வதை நன்றாய் அறிந்தாயா? இனிமேலாகிலும் இங்கே நிற்காதே; எனக்குக் கோபத்தை மூட்டாதே; போ! போ! போ! பறந்து போய்விடு!

துரு. — தாயே, எனக்குத் தாய்மார் இருவ ரென்றும், நானும் உத்தமனும் அண்ணன் தம்பிகள் என்றும் எண்ணியிருக்கும் எண்ணம் என்னைவிட் டகலாது. நாயே பேயே என்றாலும் என் வாய் மறந்தும் அவ்வாறே சொல்லும். அதை மாற்ற என்னால் முடியாதே! தாங்கள் அதைப்பற்றி ஏன் அவ்வளவு வற்புறுத்திப் பேசுகிறீர்கள்? உத்தமனோடு உட்கார என் உள்ளம் பதைக்கின்றதே!

சிற் — அடா துஷ்டப் பிள்ளையே, நீ அடாது செய்ய எத்தனிக்கின்றாய், படாது படுவாய்; உன் உடம்பைக் காப்பாற்றிக்கொள், ஓடிப்போய்விடு.

துரு. — அம்மா, நான் உத்தமன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கின்றேன்; பிறகு ஏதாவது செய்து கொள்ளுங்கள்.

சிற். — பிடிவாதம் செய்யும் பேதையே, உனக்குப் பைத்தியம் தலை மண்டைக்கேறித் தவிக்கிறாய். உன்னை அடி மேல் அடி அடித்து அப்புறப்படுத்துவேன். அவ்வளவு தூரத்துக்கு வைத்துக் கொள்ளாதே; அதற்குமுன் தப்பித்துக்கொண்டு ஓடிப் போய்விடு. கோபம் பொல்லாதது, வந்த வழி தெரியாமற் போய்விடு.

துரு. — அம்மா, அடியேன் அரசன்மீது அமரத் தாங்கள் அகமகிழ்ந்து பார்க்கமாட்டீர்களா? தாங்கள் இப்படித் தடை செய்தால் எப்படித்தான் என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்வது? தங்கள் மனத்தைச் சற்று மாற்ற முடியாதா? தங்கள் பிள்ளையின்மீது அவ்வளவு இரக்கம் வைக்கலாகாதா? அம்மா, என்ன சொல்லுகின்றீர்?

சிற். — அடா முரட்டுப் பிள்ளையே! நான் சொல்வதைக் கேள்: நீ அரசன் மடியில் அமர வேண்டுமானால் ஆழி நாதனை நோக்கித் தவஞ்செய்து என் வயிற்றில் வந்து எனக்குப் பிள்ளையாகப் பிறக்க வேண்டும். அப்போதுதான் நீ உன் தகப்பனுக்கு உரிய பிள்ளை யாவாய். இப்போது உன் இச்சை இம்மியும் ஈடேறாது. மிஞ்சுவையேயானால் பிடர் பிடித்து உந்தித் தள்ளிவிடுவேன்; இது நிச்சயம். உயிர் பிழைத்தோடிப் போ.

துரு. — தாயே, இதுதானோ முடிவு? எனக்கு இறக்குமளவும் ஏக்கத்தை வைத்துவிட்டீரே!

சிற். — உன்மத்தனே! உனக்கு இது வன்றி வேறு வழியில்லை. போ! போ! போ! காட்டுக்குப் போ! பரந்தாமனை நோக்கிப் பெரிய தவம் செய்; அப்போதுதான் உன் இஷ்டம் நிறைவேறும். போ! போ! போ! நிற்காதே! நிற்காதே! உடம்பையும், உயிரையும் காப்பாற்றிக்கொள். இனி உன்னுடைய பேச்சுக்கு நான் சிறிதும் செவி கொடுக்கப் போகிறதில்லை. போ! போ! போ!

## 3. பொறுமைத் தாய்

சிற்றன்னை இவ்வாறு சீறிச் சினந்து பேசியபோதெல்லாம் துருவன் தந்தையின் முகத்தைப் பார்த்தும் தனக்கு ஆதரவான யாதொரு பேச்சும், முகக் குறிப்பும் காணாதபடியால் மனத் தளர்ச்சி யடைந்து, சிற்றன்னையின் வாக்கே செல்லுமென்று அறிந்து நந்தவனத்தை விட்டு ஓட்டமும், நடையுமாய்த் தன்னைப் பெற்ற தாயிடம் வந்து சேர்ந்தான். தாயார் துருவனைக்கண்டதும், "அப்பா, துருவா, நீ இந்நேரம் எங்குச் சென்றிருந்தாய்? ஐயோ! மகனே! ஏன் முகவாட்டமுற்றிருக்கின்றாய்? கண்ணில் நீர் ததும்புகின்றதே! கை கால்கள் நடுங்குகின்றனவே! உன்னை யார் என்ன செய்தார்கள்? யாராவது ஏதாவது சொன்னார்களா? வாய் என்ன அப்படிக் குழறுகிறதே! பயப்படாமல் நிதானித்துப் பேசு. நடந்தவைகளை எனக்குச் செவ்வையாகக் கூறு," என்றனள். இவ்வாறு கேட்ட தன் தாய்க்குத் துருவன் தன் வருத்தத்தை யெல்லாம் அடக்கிக்கொண்டு நடந்தவைகளை யெல்லாம் நடந்தபடியே எடுத்துச் சொல்லி

விட்டான். அதைக்கேட்ட தாய் விஷயங்களையெல்லாம் ஆராய்ந் தறிந்து தன் மைந்தனுக்கு வேண்டிய அளவு புத்தி புகட்டலானாள்: "அப்பா மகனே, துருவா, நீ உன் சிற்றன்னையினிடம் நடந்துகொண்ட மாதிரியைப் பற்றி எனக்கு நிரம்பத் திருப்தியா யிருக்கிறது. அவள் தான் செய்தது அடாத காரியமா யிருந்தாலும் உன் னுடைய செய்கையைத் தகாதென எண்ணி உன்னை உன் தந்தையின் கண் எதிரிலேயே பொறுக்காத விதமாய் ஒறுத்தும்; நீ, அறியாப் பிள்ளையா யிருந்தும் அவ சரப்பட்டு வாய் தவறிப் பேசாமலும் அவளுக்கு இஷ்டமில்லாததை உன் மனோபீஷ்டத்துக்கு விரோத மானபோதிலும் செய்யாமலும், உன் மரியாதையையும் உன் தகப்பன் மரியாதையையும் காப்பாற்றிக்கொண்டு, வெகு புத்திசாலித்தனமாய் வந்துவிட்டாயே! என் னையும் கௌரவப்படுத்தினையே! ஆ! என் குழந்தாய், நான் சொல்வதைக் கேட்பாயாக: நீ இனிமேல் உத்த மனுடன் கூடாதே; கூடினால் நீயும் நானும் பழிக்கு ஆளாவதுந் தவிர உன் தந்தையையும் உலகம் நகைக் கும்படி நேரிடும். நீ மைதானத்துக்குப் போகவேண் டாம். உனக்கு அயலகத்துப் பிள்ளைகளுடன் கூட்டுறவு வேண்டாம்; நந்தவனத்தையும் எட்டிப் பாராதே. நம் முடைய அரண்மனையைச் சுற்றி எவ்வளவோ இட மிருக்கிறது! அதில் நினைத்தபோதெல்லாம் நீ ஆசை தீர விளையாடலாமே! நீ வீட்டை விட்டு ஏன் வெளியே போகவேண்டும். ஒருவரிடத்தில் கேட்காத சொல்லை ஏன் கேட்க வேண்டும். வீட்டிலேயே இனிமேல் பத்தி ரமாயிரு. உனக்கு வேண்டியவைகளைச் செய்ய நானிருக் கின்றேன். விளையாட்டு நேரம் போக மற்ற வேளைக ளில் எழுதப் படிக்கக் கற்றுக்கொள். பிறகு வேண்

டிய நூல்களை வாசித்துக் கல்வியில் தேறி இன்புற்றிருக்கலாம். யான் சொல்வதை மனத்திற் கொண்டு புத்தி சாலித்தனமா யிரு. புகழ்பெற்று வாழ்வாய் மகனே."

இவைகளை யெல்லாம் கேட்டுத் தன் தாயை நோக்கித் துருவன், "அம்மா, தாங்கள் சொல்வதெல்லாம் சரியே. நான் பட்டணத்தி லிருந்தாலல்லவோ இவைகள் எனக்குப் பொருந்தும் ? நான் இந் நிமிஷமே இவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் காட்டைத் தேடிச் சென்று கரிய மாலை நோக்கிக் கடுந் தவம் புரிந்து, உலகத்தில் எவருமடையாத பெரும்பேற்றைப் பேறவெண்டுமென் றல்லவோ எனக்குள் தீர்மானித் திருக்கின்றேன் ! தாயே, என்னை ஆசீர்வதித்து அனுமதி தாரும்," என்றான்.

துருவன் எண்ணத்தை அறிந்த தாயார் மனக்கவலையும் உடல் நடுக்கமுங்கொண்டு ஒருவாறு தேறி மைந்தனை நோக்கி, "என் கண்மணி, சிற்றன்னையின் சித்தத்தின்படி நிறைவேற்ற எண்ணம் கொண்டனையோ ; பரந்தாமனைப் பூசிப்பார் பரமபதமடைவார் என்பது திண்ணமே. ஆயினும் அதற்குத் தகுந்த சமயம் ஈதன்றே. நீயோ சின்னஞ்சிறு குழந்தை ! வீட்டை விட்டுப் போனால் வழி வாய்க்கால் தெரியுமா. அன்ன பானாதிகட்கு என்ன செய்வாய் ? ஒரு நாழிகை வழி தூரம் நடந்தறியமாட்டாயே ! காடு, செடி, மலை, வனம், வனாந்தரங்களை எவ்வாறு கடப்பாய் ? சிங்கங்களும் வரிப்புலிகளும் நிறைந்த வனங்களில் எவ்வாறு தங்கியிருப்பாய் ! மேலும் தவ நெறி படரும் மார்க்கந்தான் நீ என்ன அறிவாய்! பால் குடிக்கும் பாலகனாயிற்றே ! என்னடா குழந்தாய், ஏறுமாறான வழிக்கு, வழி வைத்துக்கொண்டாய்! நாராயணனைத் தேடியடைய

இதுதானோ நல்ல சமயம்? குழந்தாய், அவசரப்படாதே. தாய் சொல்லை மறுக்காதே. தவத்துக்கு இன்னும் காலம் இருக்கிறது. யார் எதையோ சொன்னார்கள் என்று பிடிவாதம் பண்ணாதே. சிறிது காலம் நிதானிப்பாய், பொறுத்தவரே பூமி யாள்வார். அப்பா மகனே, நான் சொல்வதைக் கேட்பாயோ!"

தாய் சொல்லை உற்றுக் கேட்ட தனயன் சொல்லுவான்: "அம்மா, என் அருமைத் தாயே, நான் வயது வராத பிள்ளை யென்று உமக்குக் கவலை வேண்டாம். காடும், மேடும் கடக்க மாட்டேன் என்கிற மனக் கஷ்டமும் உமக்கு வேண்டாம். தவநெறி அறிய மாட்டேன் என்ற தளர்ச்சியும் வேண்டாம். கொடும் புலி, சிங்கங்கள் கொன்றுவிடுமோ என்கிற சந்தேகமும் வேண்டாம். சிற்றன்னையின் சொல்லை நிறைவேற்ற வேண்டுமென்கிற சிந்தனை எனக்கில்லை. மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமற் சார்வதற்கு இப்போதே எண்ணினேன். பரந்தாமன் பாதத்தை நண்ணிப் பரமபதத்தை அடைய நிச்சயித்தேன். தேவரும், முனிவரும், யாவரும் அடையாததோர் பதவியை அடையத் தீர்மானித்தேன். இதற்குத் தாங்கள் குறுக்கிட வேண்டாம். என் மனம் போன போக்கில் நான் போகத்தான் வேண்டும். தாங்களும் பொறுமையோடு இருந்தால் பொன்னரங்கன் பொற்பாதத்தைக் கண் டுய்வீர்கள். அம்மா, போய் வருகிறேன்."

இவ்வாறு சொல்லிக்கொண்டே துருவன் வீட்டுக்கு வெளியே வந்துவிட்டான். தாயாரும் வெளியே வந்து கையைப் பிடித்துக்கொண்டு கண்ணீருங் கம்பலையுமாய் எவ்வளவு சொல்லியும் துருவன் ஒரே பிடிவாதமாய்த்

தன் தாயை உள்ளே போகும்படி சொல்லிவிட்டு ஊரை விட்டு நீங்கி வயல் வெளிகளைக் கடந்து வனங்களின் மார்க்கமாய்ச் செல்லலாயினான். உள்ளே சென்ற தாயோ, "வன தேவதைகாள்! என் மைந்தனைக் காத்துக்கொள்ளுங்கள்; வானவர்காள்! என் குழந்தைக்குக் குறை யொன்றும் வாராமற் பார்த்துக்கொள்ளுங்கள்; வாசு தேவனே! என் பாலகனைக் கடைக் கண்ணாற் கருணை புரிந் தருள்வாயாக," என் றிவ்வாறு அடிக்கடி பிரார்த் தனை செய்துகொண்டு கவலையிலேயே காலங் கழித்து வந்தாள்.

## 4. இளமையில் துறவு

நாட்டை விட்டுக் காட்டிற் சென்ற துருவன் கால் நோ யறியாமலும், பசியென்பது தோன்றாமலும், இளைப் புக் களைப்புக்களை அடையாமலும், பக்கத்திற் பாய்ந் தோடும் காட்டு மிருகங்களைக் கவனியாமலும், தன் கரு மமே கண்ணானவனாய்ப் பகல் தங்கலும், இரவு துஞ் சலுமின்றி ஒரே நடையாய் ஓயாமல் மகாதேவனாகிய நாராயணமூர்த்தியைக் கண்டு தரிசித்தலையே நோக்கமா கக்கொண்டு, தன்பாட்டுக்குத் தான் நடந்துகொண்டே யிருந்தான். பத்தெட்டுத் தினங்கள் சென்றவுடன் ஒரு பகல் துருவனுக்குத் தூரத்தில் யாழோசை கேட்டது. அஃது அவனுக்குப் பேரானந்தத்தைத் தந்தது. இன் பத்தோ டின்பமாய் அதைக் கேட்டுக்கொண்டே அவன் அரை நாழிகை வழி தூரம் சென்றான். திடீரென்று தலையிற் சடையும், மேனியில் திருவெண்ணீறும், காலிற் பாதக்குறடும், கையில் யாழுங் கொண்ட ஒரு முனிவர் தன் னெதிரில் நிற்கத் துருவன் கண்டான். கண்ட

வுடனே அவர் காலில் விழுந்தெழுந்து துருவன், "காலங் கண்ட பெரியோரே! தாங்கள் யாரோ அறியேன். காடே வீடாகக் கொண்டு கடுந்தவம் புரிபவர் போலக் காணப் படுகின்றீர்; யானோ பரந்தாமனைக் கண்ணாற் கண்டு என் மனத்திற் பட்டதோர் பாக்கியத்தைப் பெற நாடி, காடு தேடி வருகின்றேன்; வழியில் தங்களைக் கண்டதும் எனக்கு மனோதிடம் மேம்பாடுற்றது; அந்த மூலாதா ரப் பொருள் அடியேன் முன் வந்து நிற்க ஆனதோர் வழியை அருள் புரியவேண்டும் அருந்தவச்செல்வரே!" என்று கை கூப்பிக் கும்பிட்டு நின்றான்.

அறியாச் சிறுவனொருவன் செயற்கரியதாகிய ஒன் றைச் செய்து முடிக்க வெண்ணித் தம்முன் வணங்கி நிற்பதை ஆச்சரியத்துடன் அம் முனிவர் நோக்கி, "குழந்தாய், நீ யார்? குழவிப் பருவமும் நழுவ வில்லையே! கொடுங் கானகத்திற் கடு நடை நடக்கின்றாயே! கூடாத காரியத்தையும் கூடுமென்று எண்ணி வந்தாயே! உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கின் றது!" என்று குளிர்ந்த பார்வையோடு சொல்ல, துரு வன், "முனிபுங்கவரே, தங்களைப் போன்ற குணக் குன்றை என் கண்ணெதிரிற் காணக் கொடுத்து வைத்த போது, யான் எண்ணிய கருமம் முடியாததாகிய ஒன்று என்று என் புத்தியிற் படுமா? அடியேனுடைய வரலாற் றைக் கேளும்: யான் வட மதுரையை ஆளும் உத்தான பாதன் மகன். என் தம்பியும், யானும் ஒரு நாள் மைதானத்தில் விளையாடிக்கொண் டிருந்து நந்தவனம் புகுந்தோம். அங்கு எங்கள் பிதா ஒரு பீடத்தில் அமர்ந்திருந்தனர். என் தம்பி ஓடிப் பிதாவின் மடி மீது ஏறி உட்காந்து கொண்டான். நானும் அவனோடு

கூட அமரப் போனேன். அப்போது அருகே இருந்த எங்கள் சிற்றன்னை என்னைத் தடுத்து, நான் அரசன்மீ தமர யோக்யதை அற்றவனென்றும், தம்பியின் பக்கல் இருக்கத் தகாதவனென்றும், நான் அவர் வயிற்றிற் பிறக்கவில்லை யென்றும், அதற்காக நான் நாராயணனை நோக்கி நோன்பு புரிய வேண்டுமென்றுஞ் சொல்லி என்னை அவ்விடத்தினின்றும் அகற்றி விட்டார். நான் சிற்றன்னை சொல்லியபடி ஸ்ரீவாசுதேவனை நோக்கித் தவமியற்ற எண்ணிய போதிலும், மறுபடி உலக வாழ்க்கையை இச்சித்து வந்தவனல்லேன். இவ் வுலகில் இது வரை எவரும் அடையாத ஒப்புயர்வற்ற ஒரு பதவியை யடைய எண்ணியே இவ் வடவி புகுந்தேன். குறுக்கே வந்த தெய்வம்போல் தாங்கள் அடியேனிடம் குறுகப் பெற்றேன், உய்ந்தேன், உயர்வடைந்தேன்; எந்தையே எனக்கோர் உபதேசம் செய்து ஈடேற்றுவீராக. இன்னும் தங்கள் பாதார விந்தங்களிற் பணிந்துகொள்கின்றேன்," என்று அடியற்ற மரம்போல் விழுந்து நமஸ்கரித்தான்.

அப்போது முனிவர், துருவனை ஆசீர்வதித்து எழுப்பி, "அப்பா, நீ சொன்ன விஷயங்களி லிருந்து உன்னால் சொல்ல முடியாத விஷயங்களையும் அறிந்து கொண்டேன். நீயோ ஏழெட்டாண்டையும் எய்தாத இளமைப் பருவத்தில் இருக்கின்றாய். அரண்மனை தவிர அண்டை அய லிடங்களை அறிய மாட்டாய். குதிரை கனைத்தாலும் எருது முக்காரம் போட்டாலும் ஏங்கி அலறுவாய். புது மனிதரைக் கண்டாலும் பயப்பட்டோடுவாய். இந்தத் தன்மையில் இருடிகேசனை எவ்வாறு கண்டடைவாய்! இந்திரன் முதலிய தேவர்களும்

முக்குறும்பெறிந்த முனிவர்களும், மும்மூர்த்திகளுமே கண்டறியாத முகுந்தனை நீ எவ்வாறு காணுவாய்! மேலும் ஊணுறக்கமில்லாமல் எவ்வளவு காலம் காட்டில் தங்கியிருப்பாய். சிங்க முழக்கும், யானை கர்ச்சிப்பும், புலி பிளிறலும், நரி ஊளையும் நீ எவ்வாறு கேட்டு மன வொருமை அடைவாய்! ஒன்றிரண்டு நாட்களா! சில மாதங்களா! அல்லது சில வருஷங்கள்தானா! பல யுகங்கள் பாடு பட்டாலும் எம்பெருமான் திருவடிச் சேவை எய்தலாகுமோ! தொட்டுவிட்டவர் எத்தனை பேர், இடையில் விட்டவர் எத்தனை பேர், கடை போகாது நின்றவர்கள் கணக்கற்றவர்களாமே! அப்பா, குழந்தாய், தாய் சொன்னபடி கேள், 'தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை;' "என்றுளின் என்ன கடவுளும் இல்" என்று பெரியோர்களும் கூறியுள்ளார்கள். சங்கு சக்ரபாணியின் மீது சதா அன்பு வைக்க வேண்டியது தக்கதே! அவ் வன்பு உனக்கு ஆதியிலேயே அமைந்தது அழகியதே! ஆயினும் பருவ காலத்தி லன்றி மரங்கள் பழுக்குமா? நீ எடுத்துக்கொண்ட காரியம் பெரிய தாயிற்றே! தன் வலி நோக்கியன்றே எவனும் எக் காரியத்திலும் இறங்க வேண்டும்? குண முள்ள குழந்தாய், நான் சொல்வதைக் கேள்: உத்தானபாதனை யானறிவேன். நீ என்னுடன் கூட வா, அரசனுக்கு ஏற்றதைச் சொல்லி நீ இன்பத்துடன் யாதொரு குறையு மின்றி ஏற்றமான வாழ்வை அடைந்திருக்கும்படி செய்கின்றேன. சிறிது காலம் சென்று தக்க வயது வந்ததும் உன் சித்தத்தின்படி செய்யலாம்,'' என்று சொல்லிக் கையைப் பிடித்து உடன் இட்டுக்கொண்டு போகக் காலடி எடுத்து வைத்தார். துருவன் நின்றபடியே இருந்துகொண்டு இருடியை

நோக்கி, "அன்னையும், தந்தையுமாகிய அருந் தவச் செல்வரே, என்னை மன்னிக்க வேண்டும். அடியேன் எடுத்துக்கொண்ட காரியம் பெரியதேயாகுக; சிறிய தேயாகுக; கடைபோகுக; இடையில் படுக, என் உயிரிருக்க அல்லது இறக்க; யான் மனத்திற்கொண்டது கொண்டதே. தங்களுடைய ஆசீர்வாதமே எனக்குப் போதுமானது. என்னை எவ்விதத்திலும் தடை செய்யாதீர். தாங்கள் என்மீது கிருபா நோக்கம் வைத்து என்னுடைய எண்ணம் ஈடேறும்படி ஏற்றதொன்றை உபதேசித் தருளி, என்னை என் வழியிலேயே நிறுத்தும் வழியைக் காண்பீராக. தங்களுடைய மலர்ப் பாதங்களில் மறுபடி வணங்குகின்றேன்," என்று முனிவரடிகளில் முடிபட விழுந்தான். துருவனுக்குப் புத்தி கூறிய பெரியோன் அவனுடைய மனநிலைக்கு அஞ்சி அவனை நோக்கி, "அஞ்சா நெஞ்சு படைத்த அரச குமாரனே, உன்னுடைய திண்ணிய சித்தத்தை மெச்சினேன். நீ உம்பர் நாயகனை உடனே காண்பாய்; கண்டு நீ கொண்ட கருத்தை நிறைவேற்றுவாய். இதற்குப் பெரியோர்கள் ஆசீர்வாதம் உன்னிடம் இருப்பதாக! இந்த வனத்தைத் தாண்டி இரண்டொரு நாள் பிரயாணம் செய்தால் மதுவனம் என்னுமோர் அழகிய வனமொன் றுண்டு. அது யமுனை நதிதீரம். அவ்விடத்திற்குச் சென்று உனக்குத் தக்கதோர் இடத்தை நியமித்துக்கொண்டு தாமோதரனை நோக்கித் தவம் புரிவையேல் அன்பர்க்கு எளியவனாகிய அவன் அதிசீக்கிரத்திலேயே உன்முன் தோன்றி உனக்கு வேண்டிய வரங்களை யளிப்பான்," என்று சொல்லி நாராயண மந்திரத்தை அவனுக்கு உபதேசித்து, ஆசீர்வதித்து அகன்றனர். துருவனும் அவருக்கு நமஸ்காரஞ்செய்து

போற்றி, அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அவர் சொல்லி யருளியபடியே அந் மதுவனத்தைத் தேடி நடக்கலானான்.

## 5. தந்தையின் கழிவிரக்கம்

துருவன் நந்தவனத்தை விட்டு அகன்றதும் உத்தானபாதன் சரேலென்று பீடத்தை விட்டெழுந்து தன்னுடைய அறைக்குச் சென்று அமளியின்மேல் போட்ட காலும் போட்டகையுமாய்ப் புரண்டு புரண்டு, தான் பெற்ற பிள்ளைக்குத் தானே இழைத்த துரோகத்தைப் பற்றி மனம் உளைந்து, "என் ஆர் உயிரே ! என் இரு கண்ணே ! என் கண்மணியே ! என் அப்பா ! என் புத்தியே புத்தி ! என் அரசே அரசு ! என் ஆண்மையே ஆண்மை ! என்னை நானே மெச்சிக்கொள்ள வேண்டும் ! என்னை மெச்சுவார் இவ்வுலகில் எவரும் இலர். நீ கெஞ்சிக் கெஞ்சி வேண்ட, அவள் மிஞ்சி மிஞ்சி தாண்ட, நீண்ட காலம் உனக்கும் உன் மாற்றாந் தாய்க்கும் வாக்குவாதம் நடக்க, அதில் சிறிதும் தலையிட்டுக்கொள்ளாது, தடுத்து ஒன்றும் பேசாது, உன் மத்தம் பிடித்தவன்போல ஊமையிலும் ஊமையாய், தம்பத்தில் அடித்த பொம்மைபோல என் அழகிய ஆசனத்தில் அமர்ந் திருந்தேன் அல்லனோ ! அடா மகனே ! நீ அறியாப்பிள்ளையா யிருந்தும் உன் தம்பி உத்தமனோடும் உன் தாய்மார் இருவரோடும் நீ எவ்வளவோ பொருத்தமாய் நடந்துகொண்டாயே ! இன்று மாலை நந்தவனத்தில் உன்னுடைய சிற்றன்னை காரணம் சிறிதுமின்றிக் கயமைத்தனமாய்க் கண்டபடி யெல்லாம் பேசி, கொண்டதை விடாமல் கோபத்தோடு ஏசின போது நீ எவ்வளவு அடக்கமாய்த் தாய் என்கிற மரியாதைக்கு ஒரு சிறிதும் தாழ்வு வராமல் அவள் மனது

உருகும்படியாகவும், அவள் மிஞ்சுவதற்கு ஏதுவில்லாம லும் எவ்வாறு நடந்துகொண்டாய் ! அப்பா ! மகனே ! நீ அடிக்கடி என் முகத்தைப் பார்த்தாயே ! அக் குறிப்பை யான் அறிந்தும் அதற்கு யாதொரு பரிகாரமுஞ் செய்ய என்னால் முடியாமற் போயிற்றே ! நிலம் ஆளும் அரசன் நீதி செலுத்துங்கால் தன்னாலும், தன் பரிசனத்தாலும், தன் பகையாலும், கள்வர் மிருகங்களாலும் யாதொரு இடையூறும் நேராதபடி காக்கக் கடமைப்பட் டிருக்க, அக் கடமையை அருமையாய்ப் பெற்றெடுத்த என் சொந்த மைந்தனிடத்திலும் செலுத்தத் தவறின யானே அரசன் ! புருஷன் கற்பித்த வழியில் நிற்க வேண்டியவ ளாகிய மனைவியை, தவறி நடந்தவிடத்துத் தடுத்து, தக்க வழியை அவட்குப் புகட்டாத யானே புருஷன் ! ஒரு பிள்ளை மடிமீதிருக்க ஒரு பிள்ளை கீழே கிடக்கப் பட்சபாதமா யிருந்த எனதோ நடுநிலைமை ! அடா ! தேவர்களுக்கும் அருமையான தேவாமிர்தமே ! நீ இப் போது உன் தாயிடஞ் சென்று உற்றதைச் சொல்லி எவ் வாறு புலம்புகின்றாயோ ! அவள் இவ் வக்கிரமங்களைக் கேட்டு எவ்வாறு துக்கப்படுகின்றாளோ ! என்னைப்பற்றி என்ன நினைக்கின்றாளோ ! என் குழந்தாய் ! யான் இனி மேல் உனக்குத் தகப்பனாவனோ ! நீ என்னை எவ்வாறு நினைத்து என்ன செய்துகொள்வாயோ ! உன் தாயின் கதி என்ன வாமோ ! உனக்கும் அவளுக்கும் இவ்வாறு தீங்கிழைத்த என் கதி என்ன கதியோ ! எனக்கு ஆண் டவன் படி யளப்பானோ ! இப் படுக்கையிலேயே என் உயிர் பொடுக்கென்று போகாதோ!" என்று தனக்குள்ளே எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணானான். அவன் மறுநாட் காலை மைந்தன் அரண் மனையைவிட்டு அகன்று ஒரே பிடிவாதமாய்த் தவஞ்

செய்யும் நோக்கங் கொண்டு ஆரணியத்துக்கு ஏகின அருஞ் செய்தியைக் கேட்டு அலமந்து, அன்று தொட்டு அநேக நாள் அன்ன ஆகாரமின்றி, அரசச் செல்வத்தை அணுவளவாகவும் மதியாது, இராஜரீகம் என்பதைக் கனவிலும் எண்ணாது, புத்திர சோகம் விஞ்சிப் புலன்கள் ஒழிந்த பிணம்போல் ஆனான். இக் குறிப்புகளை யெல்லாம் அறிந்த மந்திரிமார் அவ்வப்போது அரசனிடம் வந்து அவனுக்கு வேண்டிய தேறுதல்களைச் சொல்லிக் கொண்டு இராஜரீகத்தையும் நடத்தி வந்தார்கள்.

சில நாட்கள் சென்றபின் துருவனைக் கண்டு உபதேசித்தருளிய முனிவராகிய நாரதர் ஒருநாள் உத்தானபாதன் சபைக்கு வந்தார். மந்திரிமார்கள் அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து எழுந்து அவருக்கு வேண்டிய உபசாரணைகளைச் செய்து முகமன் கூறி ஆசனத்தில் அமர்த்தி அரசனுக்கு அறிக்கை செய்தார்கள். உத்தானபாதன் நாரதர் வரவைக் கேட்டு நடு நடுங்கி அதி சீக்கிரத்தில் ஆடை ஆபரணங்கள் பூண்டு ஓடோடியும் வந்து ஒப்பற்ற முனிவரைப் பணிந்து ஆசனத்தில் அமர, நாரதர் குறிப்பறிந்து மந்திரிமார்களும் மற்றச் சபையோரும் அரசன் அனுமதிபெற்று அவைக்களம் விட்டு அகன்றனர். பிறகு நாரதர் அரசனை நோக்கி, “சத்தியம் தவறு உத்தானபாதனே! உன் முகவாட்டத்துக்குக் காரண மென்ன? இராஜரீகத்தின் கடமைகளை எவ்வாறு மறந்துவிட் டிருக்கின்றாய்! கடமை கடந்தவனுக்கு இம்மை மறுமையாகிய இரண்டிடங்களிலும் சுகமில்லையே! கடமையைக் கனவிலும் மறவாத நீ, மந்திரிமாரும் மற்றப் பிரஜைகளும் ஆச்சரியமும் அவலமும் அடைய அரசாட்சியை மறந்து அடைபட்டிருப்பது ஏனோ? நம்மிடத்தில் உள்ளதை உள்ளபடியே சொல்

னுவாயாக," என்று கேட்க, அரசன், நடந்த விருத்தாந் தங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக நாரத முனிவருக்கு எடுத்துச் சொல்லிப் பிறகு, "மூலப் பொருளின் தன்மையை முழுதும் அறிந்த முனிபுங்கவரே! உலகத்தில் மனிதர்கள் தவறு செய்தல் இயல்பு என்பார்கள். பூலோகம் தாங்கும் புவிராஜர்களும் சிற்சில சமயங்களில் தங்களையும் மறந்து தவறுகள் செய்தல் உண்டு. ஏழையேனைப் போல் இல்லத்திலேயே உற்ற மனைவிக்கும் பெற்ற பிள்ளைக்கும் பெருந்தவறு இயற்றிய பேதை அரசர்களை யார் எங்குக் கண்டிருக்கின்றார்கள்! மக்களைக் கூவியழைத்து மடிமீது வைத்து மார்போடணைத்து மழலைச் சொற்கேட்டு மகிழவேண்டிய கடமையிருக்க, தானே வந்த செல்வனைத் தரையிலேயே இருக்கச் செய்து, மாற்றாந் தாயுடன் மன்றாடவுஞ் செய்து, மௌன விரதம் பூண்டு சிம்மாதனத்தில் சும்மா விருந்த யானோ தகப்பன்! ஒரு பக்கத்திற் பாலும் மற்றொரு பக்கத்தில் நீரும் ஒழுகுவது போல, ஒரு மனைவி மகிழ்ச்சியில் ஓங்கலும் மற்றொருத்தி மனத்தில ஏங்கலும் அடையக் காரணமாயிருந்த யானோ கணவன்! இவ்வடாத செய்கைகளைக்கண்டு யார்தான் என்னை மெச்சுவார்கள்? தங்களைப் போன்ற பெரியோர்கள் இக் கொடுமைகளைத் தாங்குவார்களோ! தெய்வந்தான் பொறுக்குமோ!" என்று சொல்லிக் கொண்டே சிம்மாசனத்தின்மீது சாய்ந்துவிட்டான்.

இதைக் கண்ட நாரத முனிவர் அரசன்மீது பரிதாபங்கொண்டு, "என்னே மாந்தரின் நிலைமை! சிறிய தப்பிதங்களுக்கு யோசனை இல்லாமல் இடங்கொடுத்து விட்டுப் பெரிய துன்பங்களை யடைந்து தங்களுடைய உயிர்களுக்கே ஆணிவைத்துக் கொள்ளுகின்றார்கள்! நகத்தால் கிள்ளிப்போட்டுவிடாமல் கோடாலியைக்கொண்டு

வெட்ட வேண்டிய நிலைமைக்கு வந்துவிடுகின்றார்கள்! உத்தானபாதன் மெத்தவும் நொந்தான்; இப்போது இவ னுக்குத் தக்கபடி ஓர் ஆறுதலை சொல்லாவிட்டால் இவ னுயிர் நெடுங்காலம் தங்காது,'' என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு சற்றுப் பொறுத்து அரசனை விளிக்க அவன், "சுவாமிகளே!'' என்று அலறிக்கொண்டே கண் விழித்து நிமிர்ந்து நாரதருக்கு நமஸ்காரம் செய்தான். அப்போது நாரதர் அரசனைப்பார்த்து, "மெத்தவும் நொந்த உத்தானபாதனே, உன்னைச் சத்தியம் எப்போதும் தலை காப்பதாக! துருவனைப்பற்றி நீ மிகவும் துயரப் படுகின்றாய்; உன் மைந்தன் நொந்து நைந்து போவான் என்று எந்த விதத்திலும் எண்ணாதே. நான் உண்மை யைச் சொல்லுகிறேன் கேள்: துருவனை நான் மதுவனத் தருகே கண்டேன். அவன் உலகத்தில் இதுவரையில் எவரும் பெறாத ஓர்பேற்றை அடைய வைகுண்டநாதனை நோக்கி விடாமுயற்சி கொண்டு பெருந்தவம் செய்யப் போகின்றான். குழந்தைப் பருவம் கடவாதவன் காட்டிற் குறுகி எவ்வாறு கடுமையான தவத்தைச்செய்து முடிப் பான் என்று நீ மனத்தில் யாதொரு கவலையும் வைக்க வேண்டாம். அவனுக்கு அத் தவத்தில் இருக்கிற மன வலியின் தன்மை எனக்கே ஆச்சரியத்தை உண்டாக் கினது. நான் சில புத்திமதிகளைச் சொல்லியும் அவன் தன் எண்ணத்தில் தாழாது நின்று என்னை மன்றாடி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போய்விட்டான். இப் போது அவன் மதுவனத்தில் மகாவிஷ்ணுவை நோக்கி மகிமை பொருந்திய தவத்தைச் செய்துகொண் டிருக் கின்றான். வெகு சீக்கிரத்திலேயே அவன் எண்ணியபடி அரும்பேற்றைப் பெற்று உன்னுடைய நகரத்திற்குத் திரும்புவான். இது சத்தியம். ஆகையால் உத்தானபா

தனே, உன்னுடைய மனக்கவலையை இந்நிமிஷத்தோடு ஒழித்து விடுவாயாக. நீ இனிமேல் எப்போதும்போல் தப்பாமல் இராஜ காரியங்களைக் கவனித்துக்கொண்டு உன்னுடைய கடமைகளினின்றும் தவறுதிருப்பாயாக," என்று அரசனுக்குத் தைரியஞ் சொல்லி அவனை ஆசீர்வதித்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு நகர்நீங்கினுர்.

## 6. மைந்தன் மாதவம்

நாரதமுனிவரின் உபதேசத்தையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்ற துருவன் அவர் சட்டளைப்படி மதுவனத்தைத் தேடி யடைந்தான். அவ் வனத்தில் மரங்கள் அடர்ந்திருந்தன. மரங்களின் கிளைகள் ஒன்றோடொன்று பின்னலிட்டுக்கொண் டிருந்தன. புல் பூண்டுகளும் புதர்களும் செடி கொடிகளும் செறிந்திருந்தன. மந்தியும் ஏறியறியாத மரங்கள் இலை நிறைந்த கிளைகளோடுங்கூடி மேகமண்டலத்தை அளாவி இருந்தன. அக் காட்டில் சூரிய வெளிச்சம் காண்பது அரிது. மரங்களில் வசிக்கும் பறவைகளின் ஓசையும், புதர்களிலும் பாறைக் குகைகளிலும் வசிக்கும் புலி சிங்கங்களின் ஓசையும், மரக்கிளைகளை யொடித்து இலைகளையும் பட்டைகளையும் தின்னும் யானைகளின் ஓசையும், மற்றச் சிறிய ஜெந்துக்களாகிய நரி ஓனாய் முதலியவைகளின் ஓசையும் இடி மழை யோசைகளை அடக்கின. வீராதி வீரர்களுடைய மனத்தையும் சலங்கச் செய்யும் அக் காட்டின மத்தியில் பெரியதோர் பாறையைக் கண்டு அதன் மீதிருந்து தவஞ்செய்ய எண்ணினுன் துருவன். சில நாள் காய் கிழங்கு கனிகளைப் புசித்தும், சில நாள் சருகுகளைச் சாப்பிட்டும், சில நாள் தண்ணீரையே அருந்தியும், சிலநாள் காற்றை மாத்திரமே யுட்கொண்டும், பிறகு ஆகாரம் என்பது ஒன்றுமே இல்லாமலும், அப் பாறைமீ தமர்ந்து துருவன் நாரதர் உபதேசித்த நாரா

யண மந்திரத்தை அல்லும் பகலும் அனவரதமும் உச்சரித்துக்கொண்டு, மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவ் வைந்தையும் அவைகளின் வழியே செல்ல வொட்டாமல், ஒவ்வொன்றையும் தன்வயப்படுத்தி, தன்னுடைய எண்ணத்தை யெல்லாம் மேகவண்ணன்மீது வைத்து, எல்லா உலகமும் இக் குழந்தையின் தவமே தவம் என்று அடங்கா ஆச்சரியத்துடன் புகன்று புகழ்தற்குரிய பெருந்தவம் இயற்றினன். இவ்வாறு சில மாதங்கள் சென்ற பின் சாரங்கபாணியாகிய சர்வேஸ்வரன் அச் செல்வக் குழந்தையின் தவத்துக்கு அகமகிழ்ந்து அவன் முன் தோன்றி, "உத்தானபாதன் புத்திரனே! உனக்கு வேண்டிய தென்ன? ஒளிக்காமற் கேள், உன் சோரிக்கையை ஈடேற்றுவோம். பயப்படாதே," என்று திருவாய் மலர்ந்தருளினன். மார்பிற் கௌஸ்துவமணியும் இருகைகளிற் சங்கு சக்கரங்களும் கொண்டு எதிரில் தோன்றி நின்ற எம்பெருமானைக் கண்டதும் துருவன் பிரமித்து நின்றான். இதைக் கண்டதும் பரந்தாமன் பாஞ்சசன்னியத்தினால் துருவனது கன்னத்தில் தடவினர். பிறகு துருவன தன்னறிவு பெற்று, தைரியம் பிறந்தவனாய்த் தாமோதரனைச் சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து நின்று, "ஏழைச் சிறுவனை ஒரு பொருளாக மதித்து எதிரில் தோன்றியருளிய எம்பெருமானே! தங்களைக் கண்ணாரக் கண்ட பின் தங்களிடம் கேட்டுப் பெறவேண்டிய தென்பது மொன்றுண்டோ! எங்கும் இருந்து எல்லாம் அறியும் எம்பெருமானுக்கே என் எண்ணம் ஏற்படாதோ? செல்வம் வேண்டிலேன, தேசம் வேண்டிலேன், சுவர்க்காதி போகங்களையும் விரும்பி வந்தேனல்லேன்; தங்கள் தாமரைத் தாளிணைகளிலேயே எக்காலும் தங்கியிருக்க எண்ணினேன்," என்று விண்ணப்பித்துக் கொண்டே மறு

படியும் அச்சுதன் மலர்ப் பாதங்களில் விழுந்து எழுந்து நின்றான். அப்போது அச்சுதன், "மைந்தனே, உனது எண்ணம் யாமறிவோம்; பதவிகட்கெல்லா முயர்ந்ததோர் பதவியை அடைய எண்ணி எம்மை அடைக்கலம் புகுந்தாய்; நீ இப்போது எமது ஆசீர்வாதம் பெற்று வட மதுரை சென்று தந்தை தாயர் களிக்க உத்தானபாதன் சிம்மாசன மேறி, சிலகாலம் அரசச் செல்வத்தை அழகு பெற அனுபவித்து, எம்மையும் மறவாமல் இருப்பையேல் உனது கோரிக்கையை ஈடேற்றுவோம். உடனே ஊருக்குத் திரும்பிச் சென்று எமது கட்டளைப்படியே கடமையைக் கடவாது நடந்து எல்லோரையும் மகிழ்விப்பாயாக," என்று துருவனை ஆசீர்வதித்து அந்தர்த்தானமாயினான்.

## 7. தவராஜன்

மாதவஞ் செய்து மாதவனைக்கண்டு மட்டிலா ஆசீர்வாதங்களைப் பெற்ற துருவன் திருத்துழாய் மாலை அணிந்த தாமோதரன் தந்த கட்டளைப்படி காட்டகத்தை விட்டுத் தன் நாடுசெல்லத் திரும்பினான். திரும்புகாலில் தான் முன் பார்த்தும் பார்க்காத இயற்கைக் காட்சிகளை யெல்லாம் கண்டு களித்தான். அங்கங்கே இருந்த இருடிகளும் பெரியோர்களும் துருவனுக்கு மரியாதை செய்து உடன்வந்து வழிவிட்டனுப்பினார்கள். வீட்டுக்கு வரும் மார்க்கத்திலுள்ள சிற்றரசர்களும் சிறந்த பிரபுக்களும் இவனுக்கு, உத்தானபாதன் பட்டப்பிள்ளை யென்றும், உந்தி பூத்தோனைக் கண்டு, உயர்ந்த வரங்களைப் பெற்றவனென்றும் பற்பலவிதமான பரிசுகள் கொடுத்து துருவனைத் தக்க துணைவர்களுடனும் பரிவாரங்களுடனும் வடமதுரைக்கு அனுப்பி வைத்தார்கள். உத்தானபாதன், மைந்தன் வருகையை ஒற்றர்களால்

அறிந்து மனைவியருடனும் மைந்தனுடனும் தேரேறி, பலநாழிகை வழித்தூரம் பரபரப்புடன் வந்து துருவனை எதிர்கொண்டு கண்டான். தந்தையைக் கண்டதும் துருவன் தன் வாகனம்விட்டிறங்கிக் காலில் வீழ்ந்து இறைஞ்சி தாய்மாரையும் பணிந்து எழுந்து நின்றான். உடனே உத்தமன் தன் தமையன்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துக் கொண்டான். தந்தைதாயர் துருவனைக்கட்டித்தழுவி மார் போடணைத்து உச்சிமோந்து உவகை பூண்டனர். உடனே யாவரும் தேரின்மீது ஏறிக்கொண்டு எஞ்சிய வழியைக் கடந்து வடமதுரையின் வீதிகளிற் பிரவேசித்தனர்.

நகரத்தில் எங்குபார்த்தாலும் இந்திரவிழாப்போல் காணப்பட்டது. கோவில்களில் வேதவாத்திய கோஷங்களும், தெருக்களில் ஹரிபஜனைக் கூட்டங்களும், மன்றங்களில் பாகவதர் காலக்ஷேபங்களும், மண்டபங்களில் வேதாந்த சித்தாந்த விசாரணைகளும், இன்னும் ஆடல் பாடல்களும், அங்சங்கே சபாமண்டபங்களிற் பிரசங்கங்களும், கொண்டாட்டக் கூட்டங்களும் நிறைந்து பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பரமானந்தத்தை விளைவித்தன. மேலும் எங்கு பார்த்தாலும் தோரணங்களும், பூரணகும்பங்களும், விளக்குகளும், ஆலத்தட்டுகளும் அமைக்கப்பட்டிருந்தன. அந்தந்த வீட்டு ஜனங்கள் தெருவாசலிலே நின்றுகொண்டு துருவனைக் கண்ணாரக் காணவேண்டுமென எதிர்பார்த்த வண்ணமாய்த் திறந்த கண்மூடாது தெருக்கோடியையே நோக்கிக்கொண்டிருந்தனர். இவ்வளவு வைபவங்களுக்கிடையில் உத்தானபாதன் தேரும் மற்றைப் பரிவாரங்களும் வீதி வலம் வந்தன. தேரின் பீடத்தின் நாப்பண் உத்தானபாதனும், அவன் மடியில் வலது பக்கத்தில துருவனும், இடது பக்கத்தில் உத்தமனும், அரசனது வலது பக்கத்தில்

இளையமனைவியும், இடது பக்கத்தில் மூத்தமனைவியும் அமர்ந்திருந்தனர். "பிள்ளை துருவன் பெற்ற பேறே பேறு," என்பாள் ஒருமாது. "பல நாளாகத் துக்க சாக ரத்தில் அமிழ்ந்திருந்த உத்தானபாதன் இன்றைக்கு ஆனந்த சாகரத்தில் மூழ்கி யிருக்கின்றனே," என்பாள் மற்றொருமாது. "பொறுத்தவர் பூமியாள்வார் என்ப தற்கு இலக்காக நின்றாள் இடப்பாகத் தமர்ந்த பட்ட மகிஷி," என்பாள் இன்னொருமாது. "இது என்ன ஆச்ச ரியம்! இளையவள் தன் சொந்தபுத்திரனைவிட்டு துருவன் பக்கல் அமர்ந்திருக்கின்றனளே," என்பாள் வேறொரு மாது. வீதிமாதர் இவ்வாறு பற்பல விதமாகப் பேசிக் குதூகலிக்கத் தேர் அரசன் மாளிகையை அடைந்தது. அன்றிரவு மந்திரி பிரதானிகள் சேனைத்தலைவர் பிரபுக் கள் மற்ற உத்தியோகஸ்தர்கள் முதலானவர்களுக் கெல் லாம் வெகு விமரிசையான விருந்தளித்தான் அரசன். விருந்துண்ட யாவரும் அரசனுடனும் அவன் மைந்தர்க ளுடனும்கூடி வெகு சந்தோஷமாக பேசிக்கொண்டிருந்து, யாவருங் கேட்டுக்கொண்டபடி துருவன் தன் தவத்தின் வரலாற்றைப்பற்றிச் சொல்லக்கேட்டு, பெருமகிழ்ச்சியும் பேரானந்தமுங் கொண்டனர். யாவரும் இராஜ குடும் பத்தை வாழ்த்தித் தம் தம் உறைவிடங்கட் சேகினர்.


அன்று தொட்டு உத்தானபாதனுக்கு ஒருவிதத்தி லும் துக்கமென்பதேயில்லை. அவனுடைய இரண்டு மனை வியரும் உடன் பிறந்தவர்கள்போல ஒருமனப்பட்டு ஒற் றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள். துருவனுக்கு உற்ற துணை வனுயிருந்து வந்தான் பண்டு போல் உத்தமனும். சில தினங்களிலேயே ஒரு சுபமுகூர்த்தத்தில் துருவ னுக்கு இளவரசு பட்டம் கட்டிவிட்டான் அரசனாகிய உத்தானபாதன்.

## 8. உத்தம பதவி

சில வருஷங்கள் சென்றபின் உத்தானபாதன் துறவு பூண எண்ணித் தன் குலத்துக்கும் துருவன் குணத்துக்கும் ஏற்றதோர் பெண்ணைத் தேடிப்பெற்று, துருவனுக்கு மணவினை முடித்துவைத்து அவனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகத்தினையும் யாவரும் களிக்கச் செய்வித்து, துருவனுக்கும் மந்திரிமார்களுக்கும் சொல்ல வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிவிட்டு, மற்றும் செய்ய வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் தக்கபடி செய்து முடித்துத் தன் இரண்டு மனைவியருடனும் அரணியம் புகுந்தான். இப்பால் துருவன் இராஜ்யபாரத்தை ஏற்றுக்கொண்டு தம்பியையும் தக்க பதவியில் வைத்து நாட்டு நன்மையையே நாடித் தனக்கென வாழாது, தாணியைச் சிலகாலம் தரும நெறிப்படி தாங்கி, உயிர்களின் மேல் அன்புவைத்து அரசாண்டுவந்தான. இவ்வாறு நிகழுங்காலத்தில் ஒருநாள் உத்தமன் பரிவாரங்களுடன் வேடிக்கையாய் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். வேட்டை யாடுகையில் ஒரு மிருகம் இலக்குக்கு அகப்படாமல் எட்டி எட்டி வடக்கே ஓடிச்சென்று குபேரன் எல்லைக்குட்புக, உத்தமன் அதைவிடாமற் பின்பற்றிச் சென்றான். குபேரனது போர்வீரர்களில் ஒருவனாகிய ஒரு யக்ஷன் அத்துமீறி வந்ததற்காக உத்தமன்மீது கோபங்கொண்டு அவனை உயிர் துறக்கும்படி செய்தான. உத்தமன் உடன்சென்ற ஒருவன் ஓட்டோடியும் வந்து நடந்த காரியத்தைத் துருவனுக்குத் தெரிவித்தான். கேட்டதும் கேளாததற்கு முன்னே துருவன்கொண்ட துயரத்திற்கும், கோபத்திற்கும் அளவேயில்லை. அந் நிமிஷமே பறை அறைவித்துத் தன் தேசத்தின் நாலாப்பக்கங்களிலுமிருந்து நாற்படைகளையுஞ் சேர்த்துக்கொண்டு, குபேரன்

மீது சண்டைக்கெழுந்து, அவனெல்லை போய்ச் சேர்ந்து, தான் வந்த செய்தியைத் தனபதிக்குத் தெரிவித்தான். அவன் நேர்ந்தவைகளை யெல்லாம் விசாரித்தறிந்து கொண்டு புஷ்பகவிமானம் ஏறி, பூமியாளும் துருவனிடம் வந்து அவனை நோக்கி "உத்தானபாதன் புத்திரனே! வைகுண்டவாச தாசனே! இராஜ ரிஷியாகிய உனக்கு இவ்வளவு கோபம் ஏது? கோபம் பொல்லாதது, இம்மை மறுமை இரண்டையும் இல்லையாம்படி செய்வது. அது அறத்தவருக்கெல்லாம் அன்பழித்து அருளைத் தேய்ப்பது என்பதை ஏற்கெனவே உணர்ந்த நீ இப்படிப்பட்ட காரியங்களில் தலையிட்டுக்கொள்ளலாமோ! 'ஆறுவது சினம்' என்று மூதாட்டியாரும் எடுத்துக்காட்டியுள்ளார். தேடாததைத் தேடியடைந்த நீ நாடாததை நாடி வரலாமா? பரந்தாமனைப் பற்றிக்கொண்ட நீ பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று இவ்வளகாபுரிக்கு வந்தது எனக்கு வெகு ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. உலகத்தில் சாதாரணமாக ராஜ்யபாரத்தை நடத்தும் ராஜாக்களுக்கும், உந்தி பூந்தோனைக்கண்டு உயர்ந்த பதவியை அடைய இருக்கும் உனக்கும் உள்ள வித்தியாசம் என்ன? எவனோ ஒருவன் தெரிந்தும், தெரியாதும் இழைத்த குற்றத்திற்கு எல்லோரையும் தண்டித்தல் தகுமோ? நாம் இருவரும் போர்புரிந்தால் மாளும் உயிர்கட்கு மட்டுண்டோ? உனக்கு உத்தமன்மீ திருந்த அன்பின் மிகுதியால் இத்தனையும் செய்தாய். இதற்கு யான் உன்னைமெச்சினேன்," என்று சொல்லித் துருவனுக்கும், பரிவாரங்கட்கும் அன்றையதினம் அவ்விடத்தில் அருமையான விருந்தளித்து, அவனை ஆசிர்வதித்து வட மதுரைக்கு அனுப்பிவைத்து விட்டான். துருவன் தன்னுடைய நகரத்தையடைந்து முன்போல் புவியை ஆண்டு வந்தான்.

இந்தப் பிரகாரம் துருவன் பூமண்டலத்தை ஆண்டு வரும் காலத்தில் ஒரு நாள் ஆதிமூலத்தின்மீது மனம் திரும்ப அவனை நோக்கி, "வைகுண்ட வாசனே! வரத ராசனே! வாசுதேவனே! நிகரற்ற பதவியை யான் வேண்டி நிற்க இன்னும் நிலத்தைக் கட்டி ஆள என்னை நியமித்து வைத்திருக்கின்றனையே! அடியேனுக்கு இவ்வுலக வாழ்க்கை அருவருப்பாகவே அமைந்திருக்கின்றது. பூமிக்கும், எனக்கும் பொருத்தமில்லையே! ஆண்டியை அரசனாக்கி வைத்தாயே! என்னைச் சமுசார சாகரத்தில் முழுக வைத்தாயே! இதைத் தாண்டிக் கரையேறுவது எந்நாளோ! பொன்போலிலங்கும் மனம் சஞ்சலத்தால் குரங்காம். சஞ்சலத்தை வைத்து என்னைச் சங்கடத்துள் வைத்தனையே! என்னிஷ்டம் ஈடேறுவது எந்நாளோ! எந்நாளோ! எந்நாளோ!" என்று ஏக்கத்துடன் கை கூப்பிக் கலங்கி நிற்க எம்பெருமான் இரண்டாமுறை அவனுக்குத் தோன்றி, "என் அருமை மைந்தனே! யான் உனக்குச் சொல்லியது ஈடேறும் காலம் இன்றே வந்துவிட்டது. இனிமேல் எல்லா வான் மீன்களுக்கும் இடையில் நின்று மற்று அவற்றை எல்லாம் அடக்கி வான் கதியை வழியில் நிறுத்தும் துருவ பதவியை உனக்குத் தந்தோம். நீ ஆங்குச் சென்று எமதருள் பெற்று இசையுடன் வாழ்வாயாக.!" என்று திருவாய் மலர்ந்து, அந்தர்த்தானமாயினர் துருவனும் எம்பெருமான் வார்த்தைகளைக் கேட்டு எவருக்கும் எட்டாததாகிய துருவபதவியின் இடை நின்று, மற்றெல்லா வான் மீன்களைச் செலுத்தும் திறத்தைப் பெற்று, இப்போது ஒரு திவ்விய நக்ஷத்திரமாய் நாளைக்கும் வட கோடியில் நிலைத்து நிற்கின்றான்.



“நரஸிம்மாவதாரம்”

# பிரகலாதன்

## 1. நானென்னு மகந்தை

உலகத்தில் மனிதர்களுக்குச் செல்வத்தினுலும், வித்தையினுலும், மட்டில்லாத தேக பலத்தினுலும், அதிகாரத்தினுலும் அகங்காரம் தோன்றி, அவர்களை அல்லலில் அழுந்தச் செய்யும். இவைகளில் ஒன்று தானே ஒருவனிடமிருப்பின் அவன் தலைகால் தெரியாமல் தத்தித் தடுமாறுவான். இவைகள் எல்லாம் ஒருவனுக்கு ஒருங்கே அமைந்திருப்பின் அவன் என்ன பாடு படான்! ஒரூரில் குடிநீர்க் குளம் இரண்டொன்று தானே இருக்கும். ஒரு குளத்து நீரை ஊரில் உள்ளவர்கள் தத்தமக்கு வேண்டிய அளவு யாதொரு தடையுமின்றி மொண்டு கொண்டுபோய் உண்பர். அதுபோல் ஓர் ஊரில் தனிகர் ஒருவர் இருவரே இருப்பர். அவர் தமக்குக் கிடைத்த செல்வம் தமக்கென்றே கடவுளால் கொடுக்கப்பட்ட தென் றெண்ணுமல், அது பிறர்க்கென் றெனவே உணர்ந்து, அவரவர்களுக்கு வேண்டியதைத் தாராளமாய்த் தம்மிடம்வந்து பெறலாம் என்கின்ற எண்ணத்தை அவர்கள் மனத்திற் பதியவைக்கும் நிலையில் தாம் இருந்து, உலகத்தை நேசிக்கின்ற பேரறிவாளராக விளங்கவேண்டும். அவ்வாறன்றிச் செல்வத்தைப் பெற்ற

போதே செருக்குமிஞ்சி, தமக்கோரெதிர் இல்லையெனும் எண்ணத்துடன் தனிகர் ஏழைகளை எல்லா விதத்திலும் இகழ்ந்து ஏசி, தமது செல்வத்தையே மற்றவர்களைத் துன்புறுத்துவதற்குக் கருவியாக வைத்துக்கொள்வர் இத்தகையோர் முழுமுதற் கடவுளைமறந்து முத்திப்பய னற்றுரென்பதற்கோர் ஐயமுண்டோ! இவர்கள் பிறப்பு வீடுகளின் காரணங்களை ஐயமயக்க மற்று உண்மையா லுணரும் மெய்யுணர்வை எவ்வாறு எய்தற் குரியவ ராவர்! அடக்கமும் பணிவும் அனைவர்க்கும் செல்வ மாம். அச் செல்வம் பொருட் செல்வ முடையான்கட் காணப்படின் அவர்கள் பொன்னேபோற் போற்றப்படத் தக்கவ ராவரன்றே! இதற்கு மாருக உண்டி சுருக்கி, காய், கிழங்கு, சருகு, காற்று ஆகிய இவைகளை முறையே அருந்தித் தீநடு விருந்து தவஞ்செய்து கடவு ளைக் கண்டு பெறவொண்ணுப் பெரும் பேறுக்களைப் பெற்றும், அடக்கம் என்னும் அருஞ் செல்வத்தினைப் பெற்று மெய்ப்பொருள் கண்டுய்யாது, அகங்காரம் என்னும் ஆரிருட்கட் பட்டு அருந்தவப் பயனை அனு பவியாது அவமே மாண்டொழிந்து போனவர் அநேகர்! இதற்குக் காட்டாகப் பழையதோர் வரலாற்றினை இங் கெடுத்துக் கூறுவோம்.

மிகப் பழைய காலத்தில் மனோவன்மையிலும் தேகதிடத்திலும் மனிதரிலும் மேம்பட்டவர்களாய் விளங்கின சுரர், அசுரர் என்னும் இரண்டு வகுப்பினர் இருந்து வந்தனர். சுரர்களுக்கு அரசனுய் இருந்தவன் இந்திரன் என்னும் பட்டப்பெயர் பெற்று வாழ்ந்தான். அசுரர்களுக்கு அவ்வப்போது அன்னுரிற் சிறந்தோன் ஒருவன் அரசனுயிருந்து வந்தான். வியாழபகவான்

சுரகுரு; சுக்கிர பகவான் அசுரகுரு. இவ் விரு திறத்தினரும் எப்போதும் ஒருவருக் கொருவர் பகை கொண்டு போர் புரிந்து வந்தனர். ஓர் அசுரன் கடுந் தவம் புரிந்து கடவுளரிடம் மேலான வரங்கள் பெற்றுத் தன் இனத்தார்க்கு அரசனாய்ச் சுரர்களைப் பலவாறு வருத்தி வருவான். அச் சுரர்கள் மும்மூர்த்திகளிடம் அடைக்கலம் புகுந்து அவர்களில் ஒருவர் உதவி கொண்டு அவ் வசுர அரசனை அழிக்க வழிதேடுவர். இவ்வாறு அழிக்கப்பட்ட அசுர அரசர்கள் அநேகர். அவர்களில் ஒருவன் இரணியன்.

இவ் விரணியன் அகோர தவஞ் செய்து பிரமனிடம் வேண்டி வரங்களைப் பெற்றான்: படைப்புப் பொருள்களில் யாதொன்றினாலும் அவனுக்குப் பழுதில்லை; இருக்கைக்குள்ளும் வெளியிடத்தும் இன்னல் ஒன்றும் அவனுக்கு நேராது; இரவிலும் பகலிலும் மண்ணிலும் விண்ணிலும் அவனுக்கு இறப்பில்லை; ஆயுதங்களால் அவனுக்கு அழிவில்லை; தேவர், மனிதர், விலங்குகளால் அவனுடைய உயிர் நீங்காது; அவனுக்குச் சண்டையில் தோல்வி இல்லை; மகிமையில் அவன் எவர்க்கும் மிஞ்சினவன்; எல்லா வுயிர்களுக்கும் அவனே அரசன்.

இவ்வாறு இணையில்லா வரங்களைப் பெற்று இரணியன் இருப்பிடம் ஏகி, திக்கு விஜயம் செய்து, பூலோகம், புவலோகம் சுவலோகம் என்னும் மூவுலகங்களையும் தன் அரசாட்சியின்கீழ் அடக்கி, சுரர்களையும் தன் ஜனமாகிய அசுரர்களையும் இருடிகளையும் தேவ ஜாதியாரையும் மநுக்களையும் தன்னை வணங்கும்படி செய்தான். பூசுரர்க ளென்று சொல்லப்பட்ட பிராம

ணர்களுக்கு, அவர்கள் செய்யும் யாகாதிகளை யெல்லாம் தனக்கே செய்ய வேண்டுமென்றும் மூன்று வேளைகளிலும் அவர்கள் தன்னையே கடவுளாகப் பூசிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டு, அவர்களை அதன்படியே நடக்கவுஞ் செய்தான். இவ்வாறு இரணியன் தானே மூவுலகங்கட்கும் தனிச்செங்கோலோச்சும் சக்ரவர்த்தியாயும், தேவர் முனிவர்களையும் அடக்கி யாண்ட ஓர் திறத்தினால் தானே எவ்வுயிருந் தொழும் ஏகநாயகன் போலவும் விளங்கினான். தன்னை எதிர்ப்பார் எவரும் மூவுலகின்கண்ணும் இல்லையாகவே தானே கடவுளென்று தருக்கி, தன் தம்பியாகிய இரணியாக்கனைக் கொன்றுவிட்டுணு மூர்த்தியைத் தனக்கு உயிர் விரோதியாகக் கொண்டு, தன் கீழ் அடங்கி இருக்கும் மூவுலகத்தாரும் அந் நாராயணனது நாமத்தையேனும் நவிலவும் நினைக்கவுங் கூடாதென்றும், தன்னையே யாவரும் கடவுளென்று பாவித்துப் பூசனை முதலாகியன புரியவேண்டுமென்றும் ஆக்கினை செய்து, அந் நாராயணனைக் கொல்லவேண்டுமென்னும் எண்ணத்தையே தன் மனத்துட் கொண்டவனாய் அண்டங்களை ஆட்சி புரிந்து வந்தான்.

## 2. அரவின் பருமணி

இவ்வாறு நிகழுங்கால் இரணியனுக்கு இருளினின்று தோன்றும் இளஞ் சூரியன் போன்று ஒரு குமரன் உதித்தான். இரணியன் மட்டில்லா ஆனந்தங் கொண்டு தன் ஆட்சியின் கீழ் அமைந்த அனைத்துலகங்களிலும் இரணிய பூஜைசெய்து யாவரும் விழாக்கொண்டாட வேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். அரண்மனையில் தலைவர்களாயுள்ள தேவர் அசுரர் யாவ

ரும் வந்து கூடிப் பிள்ளையைக் கண்டு பேரானந்தங் கொண்டு இரணியன் இட்ட விருந்தை இன்புட னுண்டு தொட்டில் இட்டுத் தோத்திரம் செய்து பிள்ளைக்குப் **பிரகலாதன்** என்று பேரிட்டு மகிழ்ந்தனர். இரணியனும் பிரகலாதனுடைய இலக்கணங்களை யெல்லாம் உற்று நோக்கி உவப் பென்னுங் கடலுளாழ்ந்து, "இவனே அந் நாராயணனுக்கு இயமனுவான்", என்று யாவரு கேட்க ஆர்ப்பரித்தான். அசுரர்க ளெல்லாம் அகங் களித்துப் போயினர். தேவர்களோ பிரகலாதனுடைய மகிமையை மனத்தினுள் ஆராய்ந்தறிந்து இக் குழந்தையினுலேயே நமக்கோர் விமோசனமுண்டாக வேண்டுமென்று உள்ளுக் குள்ளே உவகை பூத்துப் போயினர். அரவின் பருமணி யென அவதரித்த பிரகலாதன் இரவும் பகலும் இரணி யனுக்கு இன்பமூட்டி செல்வக்குழந்தையாய்ச் சிறக்க வளர்ந்து ஓட்டிய இளமையின் ஓரைந்து பிராயத்தை யடைந்தான்.

பிள்ளைக்கு ஐந்து வயதானவுடன் அட்சராப்பியா சஞ்செய்ய வேண்டுமல்லவோ. இரணியன் தூதர்களை விடுத்துத் தனது குலகுருவாகிய சுக்கிராச்சாரியின் குமாரன் **சண்டாமார்க்கனை** அழைத்துத் தன் பக்கலில் அமர்த்தி வைத்துக்கொண்டு கட்டளையிடுகின்றான்: "எமது குலகுரு மைந்த, நமது பிரகலாதனுக்கு நாலைந் தாண்டும் முற்றுப் பெற்ற தன்றோ! இளமையிற் கற் பதே கல்வியாதலால் எமதிளம் குமாரனுக்கு ஏற்றபடி கல்வி கற்பிக்கவேண்டும். அவன் சகல சாத்திரங்களினும் வல்லவனுகவேண்டும். பல அண்டங்களையும் அடக்கியாள மனுேபல முடையவனுகவேண்டும். வீரதீரம் பொருந் திய விற்பன்னனுமாக வேண்டும். அவன் நாராயணனை

நஞ்செனப் பார்க்கவேண்டும். 'இரணிய நமோ' என்று அல்லும் பகலும் எம்மையே துதிக்கவேண்டும். சண்டாமார்க்கரே கேளும், இதில் ஏதாவது சிறிது குறையுண்டாகுமாயினும் நீர் தண்டனைக் குள்ளாவீர். போய் வாரும்; உடனே எமது அருமை மைந்தனுக்கு அட்சராப்பியாசம் செய்யும்." இவ்வாறு சண்டாமார்க்கனுக்குக் கட்டளையிட்டு, ஒரு சிறந்த மாளிகையில் அவனையும் பிரகலாதனையும் அந்தஸ்தில் உயர்ந்த சில அசுர குமரர்களையும் இருத்தி அம் மாளிகையையே யோர் குருகுல வாச மாக்கினன். அதுமுதல் அக் குமரர்கள் அங்கேயே சண்டாமார்க்கனுடன் இருந்துகொண்டு கல்வியிற் பயின்று வந்தார்கள். அவர்கள் இலக்கியம், இலக்கணம், கணிதம், பூதபௌதிக ரசாயன சாஸ்திரங்கள், தருக்கம், நீதி, இதிகாசம், புராணம் முதலாகிய நூல்களில் தேர்ந்து வல்லவராயினர். கல்வியில் மற்றப பிள்ளைகளைவிட பிரகலாதனே பிரபல நிபுணத்துவமடைந்தான்.

அக் குருகுல வாசத்தின்கண் சண்டாமார்க்கன் அடிக்கடி இரணிய நமோ! இரணிய நமோ! என்று சொல்லிக்கொள்வான். பாடம் ஆரம்பிக்கும்போதெல்லாம் அக் குருகுமாரன் அவ்வாறே இரணியதோத்திரம் செய்வான். அதைக்கண்டு பிரகலாதன் ஆச்சரியப்பட்டுத் தனக்குள்ளே, 'இவரென்ன, கடவுளின் நாமத்தை உச்சரித்துத் தோத்திரம் செய்யாமல் நமது தந்தையின் பெயரையே அடிக்கடி துதிக்கின்றாரே! எல்லா வுலகங்களுக்கும் நாராயணமூர்த்தி யன்றோ முழுமுதற் கடவுளாவார்! இவர் தன்மை இருந்தவா றென்னே!" என்று சொல்லிக்கொண்டு முகங்கோணி மனவருத்த முறு

வான். உபாத்தியாயராகிய சண்டாமார்க்கரோ இரவும் பகலும் தமக்குள்ளே, 'இதென்ன, குடிநீர்க்குக் கிணறு வெட்டக் குபூதமென்று பூதம் புறப்பட்டுக் கொல்ல வந்ததுபோல் இருக்கின்றதே! இன்னுயிர் காக்க 'இரணிய நமோ' வென்று இரவைத் தோத்திரம் சொல்லி நாராயணன் தயவு நமக்கு என்றைக்கு நண்ணுமோவென்று நாமெண்ணிக்கொண் டிருக்கையில் இப் பிரகலாதன் நமக்கு முதலுக்கே மோசம் வைப்பான்போல் காண்கின்றதே! பாடங்கள் படிக்கும்போது பணிவாகக் காணப்படுகின்றான். 'இரணிய நமோ' வென்று சொல்ல வாய்திறக்கும்போதே மனங்கூசி முகஞ் சுளிக்கின்றான். ஒவ்வோர் சமயத்தில் என்னை உறுத்தும் பார்க்கின்றான். இவ்வளவுக்கே இவ்வாறானால் தேவர்க்கும் யாவர்க்கும் ஒரு கர்த்தன இரணியனே யெனறு உபதேசித்தால் என்னவாய் முடியுமோ! பாலகன் உண்மை யறிந்தவன் போல் காணப்படுகின்றான். இவன் தன்மையைக் கூடிய சீக்கிரத்தில் நாம் ஆராய்ந் தறியவேண்டும்' என்று கவலையுற் றிருந்தார்.

சந்தேகத்தைச் சற்றே தீர்த்துக்கொள்ள வேணுமென்று சண்டாமார்க்கர் ஒருநாள் காலையில் பிள்ளைகளுக்குப் பாடம் ஆரம்பிக்கும்போது "இரணிய நமோ, இரணிய நமோ! எல்லாருஞ் சொல்லுங்கள்", என்றார். உடனே மற்றப் பிள்ளைகள் அவ்வாறே உரத்துச் சொல்லப் பிரகலாதன் யாவர் குரலையும் அடக்கி, "நாராயண நமோ, நாராயண நமோ!". என்று வானத்தை நோக்கியபடியே வாய்வழங்கி நின்றான் கேட்டார் சண்டாமார்க்கர்; "ஆ! கெட்டேன!" என்று நடுநடுங்கினார். தமக்குத்தாமே தேற்றிக்கொண்டு பிரகலாதனைப் பார்த்து,

"அப்பா, பிரகலாதா! அனைவரும் 'இரணிய நமோ' என்று சொல்ல, நீ மாத்திரம் வேறு விதமாய்ச் சொல் வானேன்?" என்று கேட்கப் பிரகலாதன், "குரு சுவாமி களே! தாங்கள் இதுவரை போதித்த புராண இதிகாச சாத்திரங்களின் திரண்ட பொருளாய் விளங்குபவன் ஆதிமூலமாகிய அந் நாராயணமூர்த்தியே யன்றோ! அந் நாராயண மந்திர மொன்றுதானே நமது இம்மை இன்னலைப் போக்கி மறுமை இன்பந் தரத்தக்கது. ஆகையின் அந் நாராயண மூர்த்தியை யன்றி வேறு எவ ரேனும் நமது வணக்கத்துக் குரியராவரோ!" என்று சொல்லிக் குருவை ஏறிட்டுப் பார்த்து நின்றான். இதைக் கேட்டதும் சுக்கிர புத்திரர் சூழ்ந்து யோசித்து இதைப் பற்றி இவனிடம் இன்னொரு முறை பேசவேண்டு மென்று இருந்தார்.

## 3. அறிவறிந்த மகன்

அசுரேசனாகிய இரணியன் ஒருநாள் அத்தாணி மண்டபத் தமர்ந்து கொலுவீற்றிருந்து சபை கலைந்த வுடன் தன் மகன் பிரகலாதனது கல்விப் பயிற்சி எவ் வாறு நடந்தேறுகின்றதெனச் சோதித்தறிய வெண் ணங்கொண்டு அவனைக் குருகுல வாசத்தினின்றும் வர வழைத்து மடிமீதமர்த்தி வைத்துக்கொண்டு, முத்தாடி உச்சிமோந்து முகமன் பேசி அவன் முகம் நோக்கி, "பிள் ளாய், பிரகலாதா! பள்ளியிற் பிள்ளைகளுடன் கூடிக் கல்விப் பயிற்சியிற் கசடறக் கற்றுத் தேர்ந்து வருகின் றனையா? ஐய மயக்கங்களை அறவே யொழித்து மெய் யுணர்வு பெற்று வருகின்றனையா? நமது குலகுரு மைந்தர் சண்டாமார்க்கர் சத்விஷயங்களை யெடுத்துச்

செவ்வனே போதிக்கின்றாரா? அவர் போதிக்கும் விடயங்களெல்லாம் நின் மனத்துக்கு ஒவ்வப் புலப்படுகின்றனவா? கண்மணி! நின் பொன்வாய் திறந்து என் மனங் களிக்கப் புகல்வாயாக", என்று கெஞ்சிக்கொஞ்சிக் கேட்டான்.

பிரகலாதன் பிதாவைப் பார்த்து, "தந்தையே சண்டாமார்க்கர் எனக்குச் சகல கலைகளையும் சந்தேக விபரீதங்கள் தலையெடுக்க வொட்டாமற் பங்கமறப் போதிக்கின்றார். பள்ளிப் பிள்ளைகளும் என்னுடன் கள்ளங் கபட மின்றிக் கல்வியிற் கண்ணுங் கருத்துமாய் உடனிருந்து உவப்புடன் ஓதி வருகின்றனர். பள்ளிக்கூடம் கல்விக்கூடமா யிருப்பது மன்றிக் களிக்கூட மாகவும், ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு புதுக்கூடமாகவும், புண்ணிய கூடமாகவும் எனக்குக் காணப்படுகின்றது. குருகுல வாசம் குடும்ப குலவாசமாகவே குதூகலம் பொலிந்து விளங்குகின்றது. கல்விப் பயிற்சியில் எனக்கோர் குறையு மில்லை," என்றான்.

இதைக்கேட்ட இரணியன் இன்பக் கடலுளாழ்ந்து, தன் மைந்தனை வாரியெடுத்து மார்போடணைத்து மறுபடி ஒரு முத்தங் கொடுத்து, முகங்குளிர்ந்து அகமலர்ந்து அன்பு தேக்கி வழிய ஆனந்தம் பொங்கிப் பாயப் பிரகலாதனை நோக்கி, "என தருமந்த குழந்தாய்! ஆசிரியரிடம் அமர்ந்து கற்ற கல்வியின் பயனாக நீ அறிந்துகொண்ட உண்மைகள் எவை? நின்வாய் மலர்ந்து எனது செவிக்கு இன்ப மூட்டுவாயாக," என்றான். இதைக் கேட்டுப் பிரகலாதன், "தந்தாய்! மண், நீர், தீ, காற்று, வெளி என்னும் இவ் வைந்து தனிப் பொருள்களாலாயன இவ் வுலகங்கள் என்றும், இவைகளிலுள்ள

ஒவ்வொரு பொருளின் ஒவ்வோ ரணுவும் அப் பஞ்ச பூதங்களாலாயது என்றும், இப் பொருள்களை அநுபவித்து ஆன்மாக்கள் இன்ப துன்பங்களை யடைந்து உய்ந்து உயர் கதியிற் பொருந்தும் என்றும், இவ் வான்மாக்களை இவ்வாறு கடைத்தேற்றி ஈடேற்றுபவன் எமது கர்த்தனாகிய நாராயணனே யென்றும் அறிந்தேன்" என்றான்.

பிரகலாதன் சொன்ன இவ் வார்த்தைகளைக் கேட்ட இரணியன் மடியின்மீதிருந்த மைந்தனைப் படியின்மீ துய்த்து, இருக்கையை விட்டெழுந்து, பிள்ளையை ஏற இறங்க உறுத்து நோக்கி, "பிரகலாதனே! முத்தொழிற் புரிந்து மூவுலகங்கட்கும் ஒரே கர்த்தனாகிய யாமிருக்க, எவனோ ஒருவனை, எமது விரோதியை, எம்முடன் பிறந்தானைக் கொன்ற அவிவேகியை, மோசமும் நாசமும் வேஷமும் பூண்ட அந்த முழுத்துரோகியை, கொலைத் தொழிலையே கடனாகக் கொண்ட கோர பாதகனை, அந்தப் பொய்யனை, கையனை, கடமைகெட்ட வெய்யனை, வெறியனையா, மெய்யன், மேலோன், அய்யன் என்று எம்முன் அறைந்தாய்! இதுதானோ நீ கற்ற கல்வியின் பயன்! இதுதானோ உனக்கு ஆசிரியன் போதித்தது!," என்று கண்கள் சிவக்கக் கடுகடுத்துப்பேசி, ஓர் வினையாளனை விளித்து, "அடாய் கொண்டுவா சண்டாமார்க்கரை இங்கே", என்று ஆர்ப்பரித்தான். அச் சேவகன் உடனே யோடி அவரை நொடியில் அழைத்துக்கொண்டு வந்து இரணியன் எதிரில் விட்டான். இதற்குள்ளாக இரணியன் சிறிது சினமாறினவனாய்க் குருமைந்தனை நோக்கி, "சண்டாமார்க்கரே! பிரகலாதன் விஷயம் என்ன? அவன் வாயில் வந்தபடி பிதற்றுகின்றானே, என்ன

அது ?", என்று அதட்டிக் கேட்டான். ஆசிரியன் நடு நடுங்கி, 'வந்ததே மோசம்', என்று மனதுட்கி இரணியனை பயபக்தியோடு விளித்து, "மண்டலாதிபதியே! மகேசுர பூபதியே! விண்டல மண்டல மெண்டிசை புரக்கும் வேந்தர் வேந்தே! விண்ணோர் வாழ்வே! வீரதீரதயா பரனே! இரணிய கர்த்தனே! ஏகநாயகனே! எனது விண்ணப்பம் இது; பொறுமையோடு கேட்டருள்வீராக: பிரகலாத மைந்தன் பெறுதற்கரியவன், அறியாப் பிள்ளை, அருமையாகக் கல்வி பயில்கின்றான், பொறுமையுடன் கேட்டவைகளை விடாது ளத்தமைத்து வீண் காலம் போக்காமல் கல்வியிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றான். இவனுக்குக் குருவணக்கமும் பெற்றோர் பணிவும் மெத்த வுண்டு. சகபாடிகளுடனும் அன்பாய் நடந்து கொள்கின்றான். அவர்களும் இவனை மெச்சிக் கொண்டாடுகின்றார்கள். ஆனால் ஒரு தடவை யான் உமது திருநாமத்தைச் சொல்லித் துதித்தபோது ஏதோ வொன்றைச் சொன்னான். அதை யான் அறிவேன். அதைப்பற்றி யான் யோசித்துக்கொண் டிருக்கின்றேன். அது அறியாத் தன்மையாகவு மிருக்கலாம். தெரியாதவர் பிதற்றலைக் கேட்டுக் கழறியு மிருக்கலாம். அவனுக்கு என்ன வயதாகிவிட்டது! பாலரண மருத பாலகனன்றோ! பகுத்தறிவு இதற்குள்ளாக வந்து விடுமா! யான் அதை ஆராய்ந்தறிந்து பரிகாரந் தேடிப் பக்குவமாக ஒக்கத்தட்டுகின்றேன். தங்களுக் கொரு கவலையும் வேண்டாம். குற்றங்கள் மக்கட் குற்றன வன்றோ; முற்றவறிந்த முழுமக்களே சற்றே தங்களை மறந்து தவறிப்போவது இயல்பா யிருக்க, இவனைப் போன்ற இளம் பிள்ளைகளுக்குக் கேட்பானேன்! இரணிய கர்த்தனே, என்னாலியன்ற முயற்சிசெய்து இவனுக்

கிருக்கும் இவ்விழுக்கை முழுக்கடிக்கின்றேன் ; நீர் முனிவு தீர்ந்தருள்வீராக," என்று இரந்து கேட்டுக் கொண்டான். சண்டாமார்க்கன் பண்பொடு மொழிந்த பணிமொழிகளைச் செவிமடுத்த சங்கிராம வீரனாகிய இரணியன் சுக்கிராச்சாரி புத்திரனை நோக்கி, "சற்குரு தனயரே, சண்டாமார்க்கரே ! எமது புத்திரனுக்குக் கல்வி கற்பித்துத் தந்தை வழி நிற்கச்செய்யும் பொறுப்பைத் தலைமேற் கொண்ட தத்துவ போதகரே ! எமது எதிர் மறுப் பில்லாக் கட்டளை இதுவே யாகும் : இன்னுஞ் சின்னாட்களே தவணை தருகின்றோம். அதற்குள் எமது புதல்வனின் இவ் விழிகுணத்தை அறவே யொழித்து அவன் மனத்தில் எமது நாமத்தையே ஊன்றப் பதியவைத்து எம்மையே போற்றும் மைந்தனாகும்படி செய்வீரேயாயின் நுமது கதி என்னவாகுமென்று நீரே அறிவீர், யாமெடுத்துப் புகலவேண்டா", என்று ஆசிரியருக்கு அநுமதி கொடுத்தனுப்பிவிட்டு, பிரகலாதனை நோக்கி, "புதல்வ ! உன் புன் புத்தியை உடனே ஒழித்துச் சீர்பெறுவாயாக. மண்டலங்களை யெல்லாம் மகிமையுடன் ஆண்டு யாவருங் கொண்டாடவும், தேவர்க ளெல்லாம் திண்டாடவும், மூவர்களை முருக்கியொறுக்கவும், முகுந்தனை வைகுந்தத்தினின்றும் புரட்டி யடித்துத் தள்ளிப் பொன்றச் செய்யவும், என்றன் எண்ணத்தை ஈடேற்றி வைக்கவும் வன்மை பெற்று வாழ்வாயாக ! ஆசிரியன் சொற்கும் கட்டளைக்கும் அடங்கி நடப்பாயாக. மறுமுறை யாம் உன்னைக் காண நேரும்போது எம் மனத்துக்கொத்த மைந்தனாவாயாக. எப்போதும் இரணிய மந்திரத்தையே திரிகரண சுத்தியாய் ஸ்மரணை செய்து தந்தையின் பெயரைத் திரிலோகத்தின் கண்ணும் நிலை நிறுத்தி வைப்பாயாக",

என்று தனக் கிஷ்டமான புத்திமதிகளைச் சொல்லிப் பள்ளி மாளிகைக் கனுப்பிவிட்டான். பெற்ற மனம் பித்தேயன்றோ !

## 4. பற்றறுப் பற்று

மாளிகை சென்ற மறையோன் தானவன் கட்டளையைப்பற்றித் தனக்குள்ளே யோசிக்கலானான்: 'இரணிய புத்திரனை ஏதோ ஒரு விதத்தில் சரிப்படுத்தலாமென்றிருந்தேன். இதற்குள்ளாக இவ்வாறு நேர்ந்துவிட்டதே! என்ன செய்யலாம்! வயிற்றுப் பிழைப்புக்கு வேலை வைத்து விட்டானே இவ் வேந்தன் மைந்தன் ! இது வேயோ ! இன்னுஞ் சில தினங்களுக்குள் இன்னுயிர் இழக்கவும் வருமே ! இதற்கென்ன யோசனை ! உரலில் தலையைக் கொடுத்து உலக்கைக்குப் பயந்தால் முடியுமா ! நம்மால் ஆனவரைக்கும் மைந்தன் மனத்தை மாற்ற மார்க்கம் தேடித்தான் தீரவேண்டும். இது விஷயத்தைப் பற்றி இரணிய குமரனிடம் நேருக்கு நோய் நயத்திலும் பயத்திலும் பேசி, அவனை வழிக்கு வரும்படி செய்யவேண்டும். கூடிய முயற்சியை நாடிச் செய்வோம். குடி மூழ்கிப் போகிறதே ! வெள்ளம் அடித்துக் கொண்டு போகும்போது கையில் அகப்பட்டதைக் கட்டிக்கொண்டு தானே பிழைக்கவேண்டும். பார்ப்போம் ஒரு கை', என்று பிரகலாதனைத் தனியாயழைத்து வைத்துக்கொண்டு, "அப்பா, பிரகலாதனே! அருமந்த பிள்ளாய் ! உனது தந்தை உலகங்களுக் கிட்டிருக்கும் கட்டளை உனக்குத் தெரியாதா ? மூவுலகங்களும் முப்மூர்த்திகளும் மநுக்களும் இரணியனென்றால் ஏங்கித் தவிக்கின்றார்களே ! அவ் விரணியனுக்கும் அசுரர் குலத்துக்கும் குருவாகிய சுக்கிராச்சாரியின்

மைந்தனன்றோ யான்! நீ குருத் துரோகம் செய்ய லாமா! மேலும் தந்தை சொன்மிக்க மந்திரமுண்டோ! தகப்பன் கட்டளைமீறி நடக்கலாமோ! ஐங்குரவர் ஆணை மறுக்கலாமோ! உலகத்தோ டொட்ட ஒழுகவேண்டு மல்லவா? அஃது இல்லார் பல கற்றும் பயன் யாது? இது நீ யறிந்த நீதிதானே 'இரணிய நமோ' வென்றால் இழுக்கென்னை", எனப் பிரகலாதன், "தாங்கள் குல குருவென்பது உண்மையே. ஆயினும் அடாததாகிய ஒன்றைச் செய்ய ஆஞ்ஞாபித்தால் அது விஷயத்தில் அடியேனுக்கு எவ்வாறு மனந் துணியும்! குரவர்க ளாயினும் குணத்தைவிட்டுக் குற்றத்தைப் போதிக்கின் சிறுவர்களாயினும் சிரிதாக் கொள்வரோ! வேத சிரப் பொருளாகிய வைகுண்டவாசனின் மெய்கண்ட நாமத் தின் மகிழாது அஞ்சுவதஞ்சா அறிவில்லாத அசுர குலத்தலைவன்தன் அசத்தான பெயரைச்சொல்ல நாவெ டுப்பரோ நாராயணனையே நண்ணு நாட்டமுடையோர்?," என்று வணக்கமாய் மொழிந்தான்.

இதனைக் கேட்டுச் சண்டாமார்க்கன், "குழந்தாய், பிரகலாதனே! யான் சொல்வதைச் சற்றுக் கவனித்துக் கேட்பாயாக. உடனுறையும் பள்ளிப் பிள்ளைகள் எனக் கும் உன் தந்தைக்கும் உகந்தபடி நடந்துகொள்ள, அத் தந்தைக்குச் சொந்த பிள்ளையாகிய நீ சட்டளை மீறி நடக்கலாமோ! உலகம் என்ன சொல்லும்! இது உனக் கும் உன் பிதாவுக்கும் பழியாகாதோ! தந்தைக்குந் தனக்கும் பழிதேடி வைப்பவன் தனயனுவனோ! ஆகாப் பிள்ளையாக ஏன் ஆகின்றாய்? மும்மூர்த்திக ளென்ன! இந்திரன் முதலிய தேவர்களென்ன! இருடிகளென்ன! அசுரர் குலகுருவாகிய சுக்கிராச்சாரியரென்ன! அவர்

வயிற்றிற் பிறந்தயானென்ன! இவர்கள் அனைவரினும் அறிவிலும் புத்தியிலும் அதிகப் பட்டவனோ நீ? நீர யோசித்துப் பார். பிள்ளை புத்தியினால் பெரியோர் சொல் லைத் தள்ளிவிடாதே. பிதாவை யோம்பாப் பிள்ளை பெருநரகடைவன் என்பது நிச்சயம். இரணிய குமா ரனே, என்ன சொல்லுகின்றாய்," எனப் பிரகலாதன் "சண்டர் குருவாகிய சண்டாமார்க்கரே! பரமபிதாவின் வழிநிற்கப் பாரத்தடையாய் நிற்கும் பிறவிப் பிதாவை எதிர்த்து நிற்பின் நிற்பது நரகம் என்கின்றீர். தாங்கள் அடியேனுக்கு ஓதிவைத்த திருமறையின் கருத்து இது தானோ! வேதமும் ஓதியும் நாதனை நண்ணினீர் இல்லை. விபரீதபுத்தியிற் கிடந்துழல்கின்றீர். தாங்கள் அசுர குலகுருவாயிருந்தும் அக் குலத்தை அடியோடு நரகிற் றள்ள நாடியிருக்கின்றீர். சீடர் சிறிய வழிகளிற் செல் லும்போது குருவானவர் அவர்களைத் திருப்பிப் பாரிய புத்தி புகட்டவேண்டுமல்லவோ? நம்பினவர்களை நாசஞ் செய்யலாமோ! இறைவனையினும் அவனுக்கு இடித் திடித்துப் போதித்து இங்கித வழியைக் காட்டுகின்றவ னல்லவோ குருவாவன். சீடன் செல்லும் வழியே தானுஞ் செல்லுங் குரவன், தானே செல்லும் வழியே தானுஞ் செல்லுந் தந்திரிக் கொப்பாவா னல்லனோ. அன்ன தந்திரி அரசனுக்கு அபஜயத்தைக் கொடுப்பது போல இன்ன குரவனும் இருளுலகத்தையே தன் சீட னுக்குத் தருவான். தந்தையும் தனயனுமாகிய சுக்கி ராச்சாரியரும் நீரும் எந்தையையும் என்னையும் முறையே முழுகடிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டீர் போலும்!", என்று சற்று மனவருத்தத்தோடு சாற்றினான்.

இந்த மொழிகளைக் கேட்ட வெள்ளி புத்திரன் சற்று வேசாறிப் பிரகலாதனை உற்றுநோக்கி, "அஞ்சா

நெஞ்சு படைத்த அசுரேசன் மைந்த ! சொஞ்சமேனுங் குறிக்கொள்ளாது பேசுகின்றாய். உலகத்தில் மைந்தர் தந்தை தேட்டத்தை எந்த வழியிலேனும் சொந்தமாக்கிக் கொள்ளத் தந்திரம் செய்கின்றனர். அவர்கள் தங்களைப் பெற்றோன் குறிப்பறிந் தொழுகி ஏவா மக்களாய் ஏவல் செய்து விளங்குவர். கிழித்த கோட்டில நின்று கீழ்ப்படிவர், மனமொவ்வாததையுஞ் செய்து மகிழ்விப்பர். ஊர்ப் பழிக் கஞ்சி உடனொத்து வாழ்வர். பெற்றோனைக் காட்டிலும் பெரிய கடவுள் இல்லென்பர். எல்லா விதத்திலும் தந்தையைச் சந்தோஷப்படுத்தி அவன் தேடிய பொருளுக்கு அருகராவர். முன்னறி தெய்வம் அத் தந்தையே யன்றோ ! பெற்ற பிதாவைப் பிள்ளை முனியின் பெறுவது பேரிழவேயாகும். அரசக் குலத்திற்கோர் ஆதவனே ! இரணியன் பெற்றெடுத்த ஏந்தலே ! என் அன்பிற் குரியவனே ! குரவரைப் பழித்து நரகில் விழாதே. தந்தையைப் பழித்து நிந்தை யடையாதே. உலகங்களுக்கெல்லாம் ஒரே கர்த்தனாக விளங்கும் பதவிக் கோர் களங்கம் வைத்துக் கொள்ளாதே. ஒரு தேசத்துக்கு அரசனாயிருந்து வாழ்வதிலும் பெறும் பேறு யாதுளது. அப்படி யிருக்க இரணியன் ஆட்சியின்கீழ் அடங்கிய கணக்கற்ற குவலயங்களுக் கெல்லாம் தனி யரசாயிருந்து ஏக கர்த்தனாய் விளங்கும் மகோந்நத பதவியை ஏனோ மறுக்கின்றாய்! 'இரணிய நம' வென்று வாய்திறந்து சொல்லின வருங்குறை வென்னே ! என்னமோ சொல்கின்றேன் என்று எண்ணாதே. இரணியன் பதவியை நீ யடைந்து ஏகபோகமாய் விளங்கி யிருக்கும் ஏற்றம் பொருந்திய வாழ்வைக் கண்டு கண்குளிரக்காணப் பெரிதும் விழைகின்றேன். முன் பின் யோசித்துப்பார். பிரகலாதனே !

பிடிவாதஞ் செய்யாதே", என்று பரிவுள்ளவன்போற் பகர்ந்தான்.

தைத்தியக் கடற் பிறந்த காளம் போன்றவனாகிய இரணிய குமாரன் இரும்பைக் காய்ச்சி இரு செவியிலும் ஊற்றினது போல ஒள்ளியோன் மகன் உரைத்த வார்த்தைகளைக் கேட்டு மனம் புழுங்கி அவனை ஏற இறங்கப் பார்த்து, "பார்க்கவன் புதல்வ! மார்க்க மறியாத மார்க்கனே கேளாய்! கற்ற கல்வியைக் காட்டு நில வாக்கினாய். பெற்ற வித்தையைப் பெருங்கமர் உய்த்தாய். கற்பகமென வந்தவர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்தாய். கற்பதின் பயன் யாது? நாராயணனது நற்றாள் தொழுவதே யன்றோ! இகபோகத்தை விரும்பிப் பர போகத்தைப் பாழாக்குவனோ பேரறிவாளி! பச்சை மேனியன், பவளவாயன், கமலச்செங்கண்ணன், அச்சுதன், ஆருயிர் நாதன், ஸ்ரீஹரி வாசுதேவன்! அவன் பதமன்றோ அனைவரும் தேடி யடையத்தக்கது! இவ்வுண்மை உம்மைப் போன்றவர்கள் அறியாததொன்றோ! விளக்கைப் பிடித்துக் கொண்டு ஏன் கிணற்றில் விழுகின்றீர். இச்சை பேசி ஏன் வயிறு வளர்க்கின்றீர். அது பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை யன்றோ! அரசச் செல்வ மெனகின்றீர்; அண்டங்களைக் கட்டியாளுங் கொண்டாட்டச் செங்கோலென்கின்றீர்; இந்திர போகத்துக்கும் ஏற்றமானதோர் போக மென்கின்றீர்; மும்மூர்த்திகளையும் முடுக்கலா மென்கின்றீர்; எம் மூர்த்திகளையும் ஏற்றலாம் என்கின்றீர்; உயர் பதவி யென்கின்றீர்; உந்நத பதவி யென்கின்றீர்; இன்னும் என்னென்னதான் சொல்லமாட்டீர்! மனச்சாட்சியை மறுத்தீர்; மாடனை வெறுத்தீர்; இகபோகத்தையே

இச்சித்தீர்; பரபோகத்தைப் பரிகரித்தீர், பறி கொடுத்தீர்! ஐயையோ! பாதகரினும் பாதகரானீர்! என் செய்வேன்! சுக்கிர சுதனே! அடியேன் அறையும் மாற்றங் கேண்மோ: அண்டங்களை யெல்லாம் ஆக்கி, அளித்து, அழிப்பவன்; அவைகளின்கண் காணப்படும் அனைத்துயிர்க்கும உயிராயுள்ளவன்; அணுவுக்குள்ளும் அணுவானவன்; எங்கும் நிறைந்தவன்; எல்லாம் அறிபவன்; யாவும் வல்லவன்; ஆவாரை ஆக்குபவன்; அழிவாரை அழிப்பவன்; அண்டினோர்க்கு அருள் புரிபவன்; தாண்டினோரைத் தண்டிப்பவன்; உற்றவர்க்கு உறுதுணையாகுபவன்; மற்றவரை யொறுத்து மறக் கருணை காட்டுபவன்; அடியார்க் கெளியன்; அன்பிற் குரியன்; அச்சுதன்; நாரணன்; நாராயணன்—அவனை யல்லாது எவன் தொழுதற்குரியன்! வேதங்களும் வேதாங்கங்களும் எவனைப் புகழ்ந் தோதுகின்றன; பெரியோர்களெல்லாம் எவன் பெயர் பேசுகின்றார்கள்; மும்மூர்த்திகளும், தேவரும், முனிவரும், எவனைப் பொருளென்று போற்றுகின்றார்கள்! இரணியனாகிய என் தந்தைக்கு இத்தகைய செல்வத்தையும் செல் வாக்கையும் தந்தவன் யார்! உன் மனத்தில் ஒளி மழுங்கி இருப்பவன் யார்; அவனே என் மனத்திற் பிரகாசிக்கின்றான். ஏன் வீணாகக் கெட்டுப்போகின்றீர்; என்னையும் கெடுக்கப் பார்க்கின்றீர்! நாராயண நாமமே நாமெல்லோரும் துதிக்கவேண்டிய நாமம். அதுவே இகபர போகங்கள் இரண்டையுந் தந்தருளும், அதுவே என் இன்பம், என் அரசு, என் மோட்சம், அதனையே யன்றி வேறெதனையும் என் மனத்தால் எண்ணேன், வாயாலும் சொல்லேன்," என்று சண்டன் மனங்கலங்கக் கதறினான்.

கேட்டான் அசுர குரு மைந்தன் ; என் செய்வான் பாவம் ! தொத்திக்கொண் டிருந்த உயிரும் தத்தித் தடுமாறியது. வேறே வழியில்லை. சாமம், பேதம், தானம் ஆகிய மூன்று வழிகளிலும் முயன்று பார்த்தும் கண்டுமுதல் ஒன்றுங் கண்டானில்லை. ஆகையால் தண்டத்தை எண்ணிச் சில மொழிகள் பகரலானான் : "கேளாய் பிரகலாதனே ! நீ இப்போது பேசியவைக ளெல்லாம் உன் உயிரையும் உடம்பையும் காப்பாற்றுமா? நீ பிடிவாதம் செய்வாயேயாயின் உன் உயிர் உடலில் தங்காது ; ஒரே வீச்சாய் வீசிவிடுவான் உன் பிதா ! அப்போது என் செய்வாய் ! மூவராலும் தேவராலும் யாவராலும் உன்னைக் காக்கமுடியாது. சட்டதிட்டங் கள் பேசாதே. தந்தை சொல் மீறதே. குருவுக்குத் துரோகம் செய்யாதே. பிள்ளையாகிய உனக்குப் பிதாவே தெய்வம். இத் தெய்வத்தை நீ வெறுத்தால் எத் தெய்வமும் உன்னை விரும்பாது எதுவும் இரணியன் வழியில் நிற்காது. இவைகளையெல்லாம் ஆய்ந்தோய்ந்து பார்த்து ஆரத்தீர யோசித்து உய்ந்துபோகும் வழியை உய்த்துணர்வாயாக. என்ன சொல்கின்றாய், 'இரணிய நமா' வென்று ஏற்றமடைவாயோ, அல்லது வேறுவிதம் சொல்லி வீணே உடலுயிர்களுக்கு உலைவைத்துக்கொள் வாயோ ! நான உன் தந்தையிடஞ் சென்று உற்றதைச் சொல்லிவிடுவேன். என்ன யோசிக்கின்றாய்," என்று தண்டோபாயத்தையும் அண்டிப் பேசிப் பார்த்தான்.

அசசுதன் அருள்பெற்ற அசுரச் சுதன் சுக்கிரச் சுதனைச் சூழ்ந்து நோக்கி, "சோற்றுச் சுவை யறி வேற்றுச் சுவை யறியா வெள்ளியோனாகிய வெள்ளி மைந்த ! யான் இனி உம்மிடம் எதுவும் எடுத்துப் பேசு

வதற்கில்லை. ஆயினும் உண்மையைச் சொல்வேன், ஒரு மொழி பகர்வேன்; என் இன்னுயிர் போக்க இவ் விரணியனால் இயலாது. எனக்குத் தெய்வம் இவனல்ல, நாராயணனே நான் தொழும் தெய்வம். அத் தெய்வமே எனக்கு உற்றுழி உதவும். நீர் என் தந்தையினிடஞ் சென்று உற்றதைச் சொல்லி உயிர்பிழைத்துப் போகலாம். நீர் எனக்குப் புகட்டவேண்டிய புத்தி யொன்றுமில்லை. உமது உபாயங்களெல்லாம் இங்குச் செல்லாது," என்று சொல்லிக்கொண்டே தன் இருக்கைக் கேகினான்.

## 5. இதோபதேசம்

நால் வகை யுபாயங்களையும் பிரயோகித்தும் பிரயோஜனப்படாதது கண்டு பிருகு புத்திரனாகிய சண்டாமார்க்கன் தைரிய மிழந்தவனாய், தக்க யோசனை வேறொன்றும் தனக்குப் புரியாமல் நடந்த வரலாறுகளை யெல்லாம் தானவவேந்தனிடம் தக்கபடி மொழிவதே முதன்மையான வழியென்று தீர்மானித்து இரணியனிடஞ் சென்று ஆசீர்வதித்து அறையலாயினான்: "சக்கரேஸ்வரனே, தயாபரனே, தானவர் கோவே, வானவர் போரேறே! விண்ணப்பம் கேண்மோ — மைந்தன் பிரகலாதனுக்குக் கலவிக்குக் குறைவில்லை. சகல சாஸ்திரங்களும், இதிகாச புராணங்களும், இலக்கிய விலக்கணங்களும் யாவும் கசடறக் கற்றான். ஆயினும் தங்கள் ஆஞ்ஞைப்படி அவனுக்கு நாலு விதத்திலும் நயத்துடன் தாங்கள் எத்தேவர்க்கும் முத்தேவர்க்கு மியாவர்க்கும் உயர்ந்த தெய்வமென்றும், தங்களையே வவ்வுயிரும் போற்றிப் புகழவேண்டு மென்றும்,

தங்களையே அவனும் அருச்சித்துத் தியானம் செய்ய வேண்டுமென்றும், அதனாலாகும் பயன் அனைத்துலகுக்கும் அரசனுய் அழியாச் செல்வத்தை யடைதலாம் என்றும் ஆன முயற்சிகள் செய்து என்னால் கூடிய வரையிலும் எடுத்தோதி அவன் மனத்தைத் திருப்பப் புத்திகள் பலவும் புகட்டினேன். அவன் எந்தப் புத்தியும் ஏற்றுக்கொள்ளாமல் தன் சொந்த புத்தியே மேலிட்டு, சொல்லத்தகாதவைகளையே சொல்லி என்னை அல்லற்படுத்துகின்றான். என்னால் அவன் புத்தியை யாற்ற முடியவில்லை; இதைச் சமூகத்தில் அறிக்கை செய்துகொண்டேன்."

இவ்வாறு சொல்லக் கேட்ட இரணியன் கடற் பொங்கி வழிந்தாற்போன்று கடுங்கோபங்கொண்டு ஆசாரியன் புத்திரனை ஆர்ப்பரித்து நோக்கி, "அடா, இராஜத் துரோகியே! இத்தனை நாளாக இளையவன் பிரகலாதனது மனத்தைத் திருப்ப இயலாது போனதென்ன. இளையவர் மனம் இலேசில் இணங்குவதன்றோ! நீ சொல்வது வீண். நீ என விரோதியின் பக்கல் இருந்து வேலை செய்கின்றாய். என் பிள்ளையைக் கொண்டு உன் அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கின்றாய். வீணாய்ப் பிரகலாதன்மீது பழி சுமத்துகின்றாய். உண்மையெல்லாம் யான் அறிவேன். இப்போது ஒரே வீச்சில் உன்னை என் வாளுக்கிரையாக்குவேன். ஆசாரிய புத்திரன என்று அஞ்சுகின்றேன். ஆயினும் உன்னை வெளியில் விடமாட்டேன். விட்டால் என் புத்திரனை ஒன்றுக்கு முதவாமற்செய்து என்னிடம் அவனுக்கு ஜென்மப் பகையை யுண்டாக்கி விடுவாய். சீ! என அருகே நிற்காதே, அப்புறம்

கில்லு", என்று சிம்மாசனத்தின் மேல் கையை நோக்கி ஓர் அறை அறைந்து காவற்காரரை விளித்து, "இச் சண்டாளனுகிய சண்டாமார்க்கனைக் கடுங்காவலில் வைத்து, காராக்கிரகத்தை விட்டு இப்படியப்படி அசையாமற் பார்த்துக்கொள்ளுங்கள். தள்ளிக்கொண்டு போய் விடுங்கள்", என்று கட்டளையிட்டு, மந்திரிகளில் ஒருவனை நோக்கி தனது குமாரனுகிய பிரகலாதனை யழைத்து வரும்படி யேவினுன்.

சென்ற மந்திரியும் செல்வனை அழைத்துக்கொண்டு சீக்கிரம் வந்து சேர்ந்தான். வந்த மைந்தனை வேந்தன் தன் பக்கத்திருத்தி வைத்துக்கொண்டு சம்பாஷிக்கலானுன் :

**இரணியன்** — பாலகனுகிய பிரகலாதனே! என் பிரிய குழந்தாய்! சண்டாமார்க்கனிடம் சொல்லாத சொல் சொன்னுயாமே, என்ன சொன்னுய்?

**பிரகலாதன்** — பிதாவே! "இரணிய நமோ" வென்று சொல்லச் சொன்னுர், யான் "நாராயண நமோ" வென்று சொன்னேன்.

**இ.** — நாராயணன் என்பவன் எனக்குப் பகையாளி, அவன் பெயரைச் சொல்லக் கூடாது — என்று நான் முன்னிட்டே உனக்குப் புத்தி சொல்லிப் பள்ளிக்கூட மனுப்பிவைத்தேனே; அதை நீ மறந்துவிட்டாயோ ?

**பி.** — நாராயணனே சர்வ பூத தத்துவன் என்றும், அவனே அனைத்திற்கும் நாயகன் என்றும், அவனே எப்பொருட்கும் மெய்ப் பொருள் என்றும நானும் முன்னிட்டே தங்கட்குத் தெரிவித்திருக்கின்றேனே !

இ. — முத்தொழில் புரியும் மும்மூர்த்திகளும் எனக்குக் கட்டுப்பட்டிருக்க, அண்டத்திற்கும் நாயகன் என்கின்ற அவனாவன்?

பி. — மும்மூர்த்திகட்கும் முதல் மூர்த்தியாகிய நாராயணனே அவன்.

இ. — எனது கண்ணிற் படாமல் கரந்துறைகின்ற அந் நாராயணனையா இவ்வளவு தூரம் ஏற்றிப் பேசுகின்றாய்?

பி. — அவன் நமது கண்ணுக்குப் புலப்படான்.

இ. — ஏன்?

பி. — அவனைச் சிந்தித்து வந்திப்பவன் எவனோ அவன் கண்ணுக்குத்தான் அருமையாய்ப் புலப்படுவான். மற்றவர்கள் அவனைக் காண முடியாது.

இ. — நீ அவனை நேசிக்கின்றாயோ?

பி. — ஆம், அவனைத் தவிர மற்று யாரை நேசிக்கும் என் மனம்!

இ. — அவனை நீ கண்டு இருக்கின்றாயோ?

பி. — இரவும் பகலும் எந்நேரமும் யான் அவனைத் தரிசித்துக்கொண்டுதான் இருக்கின்றேன்.

இ. — நீயாவது அவனை எனக்குக் காட்ட முடியுமோ?

பி. — முடியாது.

இ. — ஏன்?

பி. — சர்க்கரையின் தித்திப்பை ஒருவன் மற்றொருவனுக்கு எடுத்துக் காட்ட முடியுமா? அதனை அவனவனன்றோ அநுபவித்து அறியவேண்டும்,

இ. — ஆனால் அவனுக்கு உருவமென்ப தில்லையோ ?

பி. — இல்லை, அவன் அரூபி.

இ. — அப்படியாயின் அவன் பன்றியாக உருவெடுத்து வந்து என் உடன்பிறந்தானை எப்படி கொன்று போட்டான் ?

பி. — அவன் தன்னை விரும்புவார்க்கு அறக் கருணை காட்டி அருளவும், வெறுப்பார்க்கு மறக் கருணை காட்டி மயக்கம் தீர்க்கவும் அவ்வப்போது வேண்டிய உருவத்தைப் பெற்று அநுக்கிரகித்து அந்தர்த்தான மாவன்.

இ. — ஆயின் என் தம்பிக்கு அவன் செய்த நன்மை என்ன ?

பி. — என் சிறிய தந்தை கொண்டிருந்த மமதையைப் போக்கி மயர்வு நீக்கி அவருக்கு மாட்சிமை உண்டாக்கினன்.

இ. — ஓ கோ ! என்னையும் ஒருருவு கொண்டு ஒறுத்து எனக்கும் ஒரு வழி நல்க வல்லவன் போலும் !

பி. — ஆம், நீர் அவனை வெறுக்காது விருப்புப் பூண்டு பணிந் திருப்பீராயின், நீரும் அவனுட னிருந்து நித்தியானந்தத்தை அனுபவிக்கலாம். இன்றேல் பிறவிப் பிணி நீங்காது நின்றுழல்வீர்.

இ. — இருக்கட்டும், இங்கு நீ வீண் புராணங்கள் விளம்பாதே. நாராயணன என்கின்ற அத் திருட்டுச் சாமியின் தயவு எனக்கிருக்க வேண்டாம். நீ அவனை நேசிக்கிறாய் அல்லவா ? உனக்கு இப்

போது யான் பல இடுக்கண்கள் இழைக்கப்போகின்றேன். நீ அந் நாராயணன் தயவினால் எவ்வாறு பிழைக்கப் போகின்றாய் பார்க்கின்றேன்! இவ்விடம் விட்டு நட.

## 6. கூடாததும் கூடும்

பிரகலாதனது பேச்சைக் கேட்ட இரணியன் என்றும் அறியாத இன்னலடைந்து தனக்குள்ளே யோசிக்கின்றான்: "வளர்த்த கிடா மார்பிற் பாய்ந்ததே! பிரகலாதன் பிரபல வாழ்வு பெறுவான் என்று எண்ணியிருந்தேனே! குலத்துக்குக் கோடரிக் காம்பாயினனே! என் விரோதியை நேசிக்கின்றானே! அந் நாராயணன் அகப்படுவானாகில் அவனை என்ன பாடு படுத்துவேன்! என் கண்ணுக்குப் புலப்படானா, அவன் கண்ணுக்குப் புலப்படுவனாம் — என்ன ஆச்சரியம் இது! என் வாளுக்குப் பயந்து எங்கேயோ ஒளித்துக்கொண்டிருக்கின்றவன் நான் இருக்குமிடத்திலும் எட்டிப் பார்ப்பானோ! இதனை இன்றே சோதிக்க வேண்டும். மைந்தனுக்குச் சில இடுக்கண்கள் விளைவிக்க வேண்டும். இவனுக்கு நண்பனாகிய நாராயணன் எவ்வாறு உதவி புரிகின்றான் என்பதைப் பார்க்கவேண்டும்", — என்று தக்க ஏற்பாடுகளும் செய்யலுற்றான்.

இரணியன் மறுநாள் மந்திரிகளை அழைத்து அவர்களை நோக்கி, "வரு பொருளுரைக்கும் மந்திரிமார்களே! என் மைந்தன் பிரகலாதன் என் தம்பியைக் கொன்ற பகையாளியாகிய நாராயணனை நேசித்திருக்கின்றான். அவனுக்கு அந்தத் துரோகியின் எண்ணம் வரவொட்டாமற் செய்ய வேண்டும். அதற்கென்ன தண்டனை

அவனுக்கு விதிக்கலாம்", என்று கேட்டான். அசுரத் மந்திரிகளி லொருவன், "கர்த்தனே! முதன் முதல் ஒரு சர்ப்பத்தைக் கொண்டு அவனைத் தீண்டவைப் போம், பிறகு யோசிக்கலாம்," என்றான். இதுகேட்டு இரணியன் அவ்வாறே செய்ய அநுமதி கொடுக்க, மந்திரிகள் ஓர் அரவைத் தருவித்துப் பிரகலாதனைத் தீண்டவைத்தனர். இதைக்கண்டு பிரகலாதன் ஒன்றும் பேசாமல் எட்டெழுத்தைத் தியானித்துக்கொண்டு ஒரே எண்ணமாக இருந்துவிட்டான். நாழிகை பலகழிந்தும் பிரகலாதன் தேகத்தின தன்மை சற்றும் மாறுபட் டிலது. அவனது முகவொளி சிறிதுங் குறையவில்லை. மயக்கம் முதலாகிய விஷ மாறுபாட்டுக் குறிகள் அவன் தேகத்தின்கண்ணே யாதொன்றும் காணப்படவில்லை. பிரகலாதனுடைய இவ்வாச்சரியத் தன்மையைக் கண்ட மந்திரிகள் இரணியனிடஞ் சென்று நிகழ்ந்ததை அறி வித்தார்கள். அவன் சற்று யோசித்து மந்திரிகளைப் பார்த்து, "இன்னும் பல விடநாகங்களைத் தருவித்து ஒவ் வொன்றாகப் பிரகலாதனைக் கடிக்கச்செய்து பாருங்கள்," என்றான். அக் கட்டளை மேற்கொண்டு மந்திரிகள் விடநாகம் இன்னொன்றைத் தருவித்து இரணிய மைந் தனைக் கடிக்கச் செய்தார்கள். அப்போதும் அவன் முனபோலவே ஊறுபாடின்றிக் காணபபட்டான். பிறகு மந்திரிகள் நாகங்களை இவ்விரண்டாகவும், மும்மூன் றாகவும், நன்னான்காகவும், ஐவைந்தாகவும், அவ்வா றாகவும் இவ்வாறு பற்பல பாம்புகளைக் கோபமூட்டிக் கடிக்கவைத்தார்கள். இவ்வளவுக்கும் இரணிய சுதன் இம்மியளவும மயம்மா எய்திலனில்லை. கடுவிஷம் குருதியிற் சேரச் சேரப் பிரகலாதன தேகத்தில் ஒளி விஞ்சியது. மிக மேலான முகமலர்ச்சியு முண்டாயது.

இந் நடவடிக்கைகளுக் கெல்லாம் பிரகலாதன் மனம் தடுமாற்ற மென்பதைச் சிறிதும் அடையாமல் அஷ் டாட்சரத்தை உச்சரித்துக்கொண் டிருந்தது.

இவ்வதிசயத்தைக் கண்ட மந்திரிகள் மன்னர் மன்னனிடம் சென்று நடந்ததை நடந்தபடியேயும் கண்டதைக் கண்டபடியேயும் சொல்லி விட்டார்கள். உடனே இரணியன் மைந்தனே வரவழைத்து வைத்துக் கொண்டு, "அடா, மகனே! இத்தனை நாகங்கள் தீண்டியும் உனது தேகம் சற்றும் ஊறுபடாதது என்னே?", என்ன, பிரகலாதன், "தந்தையே! அச்சுதன் அடியவரைப் பற்றுமோ நச்சு, பற்றினும் ஊறு படுத்த அதற்கு வலியிலது. மேலும் அக் குண்டலிக ளெல்லாம் எனக்குக் குழந்தைகள்போ லிருந்தன. அவைகள் என்னைக் கடித்தனவென்று நீங்கள் கண்டது எனக்கு முத்தந் தந்ததுபோன்றிருந்தது. ஏனென்றால் அவைகள் என்னைத் தாமோதரன் தாசனென் றறியும்," என்றான். தனயன் மொழிந்ததைத் தேர்ந்தறியாத தானவன் மறுபடி அவனை நோக்கி, "என்னடா! வானத்தை வில்லாய் வளைத்தே னென்கின்றாய், மணலைக் கயிறாத் திரித்தே னெனகின்றாய்! ஏதோ மந்திர தந்தி ரங்களைக் கற்றுக்கொண் டிருக்கின்றாய். இது அந்தத் துரோகிப் பார்ப்பான் கற்பனைபோலும். இருக்கட்டும் இன்னும் பார்க்கின்றேன் உன் ஜெகஜ் ஜால வித் தையை! நீ உன் இருப்பிடம் போயிரு," என்று சொல்லி யனுப்பிவிட்டான.

மறுபடி இரணியன மந்திரிமார்களை வரவழைத்து நோக்கி, "மந்திரிகாள்! பிரகலாதனுக்கு இனனும் புத்தி வரவில்லை. மந்திர தந்திரங்கள் ஏதோ கற்றுக்கொண்டு

நம்மை யெல்லாம் மயங்க வைத்துக்கொண் டிருக்கின்ருன். இன்னும் அவன் எவ்வளவு தூரம் போகின்ருன் என்பதைப் பார்க்க வேண்டும். இனிமேல் அவனை நமது பிள்ளையென்று எண்ணப்படாது. அவனும் என்னைத் தந்தை யென்று எண்ணிப் பார்க்கவில்லை. என் விரோதியை ஏற்றி என்னை இறக்குகின்ருன், துரோகி. ஆகையால் அவனுக்குச் சற்றும் கண்ணோட்டம் காட்டப்படாது. நீர் இனி இவனுக்கு என்னென்ன கடுந் தண்டனைகள் செய்ய முடியுமோ அவைகளை யெல்லாம் தாராளமாகச் செய்யுங்கள். அவ்வப்போது நடந்தேறு பவைகளை அடிக்கடி எனக்குத் தெரிவித்து வாருங்கள். நீங்கள் உடனே சென்று என் சட்டளையைத் தட்டுத் தடையின்றி நிறைவேற்றுங்கள்; பயப்படாதீர்கள்," என்று உறுதியாகச் சொல்லியனுப்பினுன்.

மந்திரிமார்கள் அரசனுணையை மேற்கொண்டு யாவரு மோரிடத்திற் கூடிப் பிரகலாதனுக்குச் செய்ய வேண்டிய தண்டனைகளைக் குறித்துத் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுக ளெல்லாம் செய்துகொண்டனர். முதலில் அன்னத்திற் பலவித பாஷாணங்கள் முதலிய விஷ வஸ்துக்களைக் கலந்து படைத்தார்கள். பிரகலாதன் அதனை யுண்டு செரிப்பித்துக்கொண்டான். பிறகு பிரகலாதனை யோர் குழி வெட்டிக் கண்டம் வரையில் பூமியிற் புதைத்து வைத்துப் பட்டத்து யானையை ஏவி அவன் தலையை யிடறும்படி செய்தனர். அவ் யானை மைந்தன் அருகிற் சென்று கை, காது, கால், வால் எதையும் அசைக்காமல் மரம்போல் நின்றுகொண்டது. மாவுத்தன் என்ன பாடு பட்டாலும் அது வைத்த காலை அடி பெயர்க்கவே யில்லை. அங்குசமும்

ஒடிந்துவிட்டதே யன்றிப் பிரகலாதன் யாதொரு பங்க மடையவில்லை. அதன் பிறகு மந்திரிகள் மைந்தனை ஒரு பெரிய மலையுச்சியி லேற்றிக் கை கால்களைச் சேர்த்துக் குண்டுக் கட்டாய்க் கட்டி அங்கிருந்தபடியே உருட்டிவிட்டார்கள். பிரகலாதன் கல் முள் மரஞ் செடி பாறைகளில் தாக்கப்பட்டு உருண்டோடி வந்து தரையில் விழுந்தான். அவ்வாறு வந்து விழுந்தும் அவன் உடலின்கண் காயம், தழும்பு, என்பு முறிதல், முதலிய ஊறுபாடுகள் ஒன்றுமின்றிக் காணப்பட்டான். அதற்குப்பின் அமைச்சர்கள் அப் பிரகலாதனை ஒரு பெரிய பாறாங்கல்லோடு சேர்த்துக் கட்டிப் படகில் ஏற்றிக்கொண்டுபோய் நடுக் கடலில் எறிந்துவிட்டுத் திரும்பி வேகமாய்க் கடற்கரை அணுகிப் படகைவிட்டிறங்கிக் கரையேறினர். அவர்களுடன் கூடவே பிரகலாதனும் கட்டின கல்லோடு கரையேறினான். அதற்கு மேல் அமைச்சர்கள் பிரகலாதனை ஒரு இருப்புப் பட்டடையின்மேல் வளர்த்திக் கருமாரைக் கொண்டு சம்மட்டிகளால் சாக அடிக்கும்படி செய்தார்கள். யாம நேர மடித்தும் யாதும் புண்பட்டானில்லை பிரகலாதன். கருமார்கள் கை யோய்ந்து போய்விட்டனர். இன்னும் மந்திரத் துள்ளார் யோசித்து ஒரு நிலக் குகை சமைத்துப் பிரகலாதனை அதில் நுழைத்துக் காற்று உள்ளே செல்லாதபடி பல நாள் மூடி வைத்துத் திறந்து பார்த்தார்கள். இரணிய குமாரன் இருந்தபடியே யிருந்து வெளியேறினான்.

மந்திரிகள் தந்திரங்கள் ஒன்றும் முற்றுப் பெறவில்லை யாவரும் கூடி இரணியனிடம் சென்று, "அண்டங்களை ஆட்சி புரியும் ஆண்டவனே! தாங்கள் விதத்த

யடியே வேண்டிய பிரயத்தனங்கள் செய்து பிரகலாத னுக்குக் கணக்கற்ற இடுக்கண்களை இழைத்தோம். அவைகளில் ஒன்றும் பலிக்கவில்லையே! இவைகள் தாங்கள் அவ்வப்போது அறிந்தனதாமே. இனி எங்களால் ஒன்றும் கூடாது," என்று சொல்லிக் கைகூப்பி நின்றார்கள். இரணியன உடனே பிரகலாதனை அழைத்து வரச் சொல்லி அவனைப் பார்த்து, "அடே! தந்திரங் கற்ற தானவா! விஷமூட்டியும், வெங்கரி யிடறியும், வெற்பின் வீழ்த்தும், வேலையி லாழ்த்தும், இரும்பா லடித்தும், இருட்குகை மூடியும் இருக்கின்றாயே உயிருடன் இன்னமும்! இது என்ன மாயமோ யான் அறியேன்! இனியாகிலும் 'இரணிய நமோ' வென்புராயோ? இருமுது குரவரைப் பணிவாயோ? என்ன சொல்லுகிறாயடா, சொன்ன புத்தி கேளாதவனே! சோரன் நேசம் மீளாதவனே,!" என்றான். பிரகலாதனன், "தந்தையே கேளாய்! விஷமே அமிர்தமாகும், யானையே பூனையாகும், கல்லே மெத்தையாகும், நீத்தே நிலையாகும், இரும்பே மலராகும், ஆகாசமே காற்றாகும் — அந்த நாராயணனை நண்ணி அவன் நாமத்தையே எண்ணும் நுண்ணறிவாளர்க்கு! என்னைப் பெற்றெடுத்த எந்தையே! இனிமேலாவது அன்னோன் பாதத்தை நுண்ணறிவு கொண்டு நண்ணுவதற்கு எண்ணமுண்டோ?" என்றான்.

இத் தன்மையாகத் துணிந்து வாய்மொழி பேசிய சேயைச் "சீ" யென்று விரட்டித் தள்ளிவிட்டு அமைச்சரையேவி ஒரு பெரிய குழி வெட்டி, அதில் கணக்கற்ற தீக் கட்டைச் சுமைகளை அடுக்கி நெருப்பு வைத்து, அது நாக்குகள் நீட்டி எரிய, அத் தீயில் பிரகலாதனைக்

குளிக்கும்படி செய்தான். என்ன பரிதாபம்! தான் பெற்ற பிள்ளையைத் தானே சுட்டெரிப்பனோ உயிருடை யொருவன்! ஆறுவது சினம் என்று வெகுளிக்கோர் விதி யிட்டு வைத்தா ரன்றோ நமது நமை மூதாட்டியாரும். மேலும்,

*தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லுஞ் சினம்.*
*சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.*

என்னுந் தமிழ் மறை. நெருப்புக் குண்டம் எரிந்தது. கட்டைக ளெல்லாம் சாம்பற் பட்டுப் போய்ப் போர் ஒழுகி நின்றது. போர் போர்த்திருந்த பிள்ளை அதன் நாப்பணிருந்து புத்திரகாமேட்டி யாக குண்டத்தி னுதித்த புத்திரனைப் போன்று எழுந்தது.

## 7. வழிகாட்டிப் பிள்ளை

தானே நேர்நின்று தீயிட் டெரித்தும் தீமை யொன் றின்றி மேலெழுந்த பிரகலாதனைக் கண்டு இரணி யனும் பிரமித்தான். செய்வதி யாதென்று தியங்கி னான், மயங்கினான், செயலற்றான், அயர் வுற்றான், மானம் போயிற்றே என்னு முணர்வு பெற்றான். தன்னைத் தானே நொந்துகொண்டான், தணியாக் கோபம் பின்னையும் கொண்டான, 'கொண்டுவா பிரகலாதனை', என்றான்; அவனும் வந்து எதிரே நின்றான். நின்றானை நோக்கி, "மந்திர தந்திர இந்திர ஜாலங் கற்ற மைந்தனே! குலத்தைக் கெடுக்க வந்தனையே! எங்கிருந்து வந்த தடா இந்தச் சமர்த்துனக்கு," என்றான். பிரகலாதன்

பிதாவைப் பார்த்துப் பணிவோடும் துணிவோடும் பகரலானான்: "தானவ குலத்துக் தலைவனே, வானவரும் பெறவொண்ணா வரம் பெற்றோனே, மானங் காக்க மன வுறுதி கொண்ட மகிபனே, என்னைப் பெற்றெடுத்து வளர்த்த தந்தையே! கடைசியாக அறியாச் சிறியேன் ஒரு மொழி பகர்வேன். அதற்குப் பொறுமையுடன் செவிகொடுத் தருள்வீராக :—

'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையுங் கட்டலாம்
ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத் தாட்டலாம்

வெந்தழலில் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற் றுண்ணலாம்
வேறொருவர் காணமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்

சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்

சிந்தையை அடக்கியே சும்மா யிருக்கின்ற
திறம்அரிது சத்தாகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயா னந்தமே.'

இதுவேயோ, 'மனமடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே,' என்றும் கூறியிருக்கின்றார்கள். 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்,' என்று உலக நீதியும் ஓதுகின்றது. 'மனம்போல் இலங்குமனம் சஞ்சலத் தாற் குரங்காம்,' என்பதும் பெரியோரு ருண்மை.

மனம் கண்டவழி செல்லும்; அகங்கார மமகாரங்களைக் கொள்ளும்; அறிவை அழிக்கும், அன்பைப் பழிக்கும்; அவ் வன்புருவான பரத்தை இழக்கச் செய்யும்; ஐம் புல வயப்பட்டு மெய்ப்பொருள் காணாது மயங்கும். உண்மைப் பொருள்கள் மூன்று: அவையாவன, உம்பன், உயிர், உடல்; இவற்றையே பதி, பசு, பாசம் என்பர். பதியே கடவுள், பசுவே ஆன்மா, பாசமே உடல், இப் பாசமே உலகம் என்றும் மாயையென்றும் பெயர் பெறும். இதுவே பஞ்ச பூதங்களாகிய சடப் பொருள்களாம். இதுவே உலகமும் உலகத்திலுள்ள சராசரங்களும் ஆகும். பதியானவன் பசுக்களுக்குத் தநுகரண புவன போகங்களைத் தந்து, புண்ணிய பாவங்களுக்கேற்ப அறு பவும் கொடுத்து, அறிவையூட்டி, ஆநந்தமளித்து அவ் வானந்தத்தைத் தானு மனுபவிப்பன. இவ் வானந்தத் தையே பரமபதமென்றும், முக்தி யென்றும் மொழிவர். பதியும், பரமபிதாவு மாகிய பரமேசுரன் உலகப் பொருள் களி னிடத்தும், உயிர்களினிடத்தும் வேறாகியும், உட னாகியும், ஒன்றாகியும் ஒழுகுவன். ஆன்மாவானது அவ னிட்ட வழி நின்று அவ னிட்டத்தை நிறைவேற்றி அவனுடன் கூடும். ஆன்மா வாகிய உயிர்களை யுடைய நாம தத்தமக்குற்ற கடமைகளை வழுவின்றி யியற்றி அவனுடன் கூடி யிருத்த லாகிய ஆநந்த பதவியை அடையவேண்டும். அதுவே மோட்சமாம். இவ் வான் மாவுக்கு அவனருளன்றி யாதோ ரணுவையும் அசைக்க முடியாது. ஒரு ஆன்மாவானது யோக சாதனங்களால் ஆக்கல், அளித்தல், அழித்தல, மறைத்தல, அருளல ஆகிய ஐந் தொழில்களையும் செய்யலாம். ஆனால் அது ஓர் இடத்துக்கும், ஓர் காலத்துக்கும் உரியதாய் ஒவ் வோர் சமயத்தல் நிகழ்வதா யிருக்குமே யொழிய எவ்

விடங்களிலும், எக் காலத்திலும், எச் சமயத்திலும் நிகழு மென்பது கூடாது. அவ்வாறு செய்யக்கூடியது அப் பரமான்மாவாகிய பதி ஒன்றே. ஜீவான்மாக்க ளாகிய பசுக்கள் முத் தொழில் புரியினும் முழு முதல் ஆகா. ஆசையால் அப் பரமான்மாவாகிய பரமேஸ்வ ரனே எவ்விடத்திலும், எக் காலத்திலும், எப்பொரு ளினும் இருத்தற் குரியன். அவனே யாவருக்கும், யாவற்றிற்கும் அருள் செய்பவன்; அவனே கடவுள்; அவனே நாராயணன். அவனையே யாவையும், யாவரும், நீயும், நானும் வழிபட வேண்டும். அவன் அன்புருவ மானவன். மீனைக் கொண்டு மீனைப் பிடித்தற்போல அன்பைக் கொண்டே அவனருள் பெற வேண்டும். ஆகையால் என் னருமைப் பிதாவே! போனதெல்லாம் போக இனிமேலாவது மனந்திருந்தி மகானுபாவனாகிய அவனை வழிபட்டு அவனருள் பெறுவாயாக. அவ னருளற்றார் அனைவரு மற்றார்,'' என்று சொல்லி முடித்தான்.

பிரகலாதன் எடுத்தோதிய அருந்தத்துவ மொழிக ளெல்லாம் பெருங்கடலிற் கரைத்த புளியாகியது. 'என னமோ ஏதோ சொல்லப் போகின்றானே' என்று நினைத்த இரணியன் 'நாராயணன்' என்கின்ற சொல் காதில் விழுந்ததும், திரும்பத் திரும்ப அதே வழிக்கு வருகின் றானே! இருக்கட்டும், இப்படிப்பட்ட அசுடிதகடாறு சக்தி யுடைய இவன் அந் நாராயண னென்பவனை எனக்குக் காட்ட வேண்டும். அவ்வாறு காட்டினால் பிறகு செய்வதைச் செய்வோம்,' என்று எண்ணிக்கொண்டு பிரகலாதனைப் பார்த்து, ''அடா பிரகலாதனே! எங்கு முளனென்கின்ற அந்த நாராயணன் இதோ இருக்கின்ற

இந்தத் தூணிலும் இருப்பானோ," என்றான். அதற்குப் பிரகலாதன், 'பாவி இவனுக்கு இன்னும் பச்சாத்தாப முண்டாகவில்லையே,!' என்று மனமிரங்கி, முகுந்தனைத் தன் மனத்தினால் வணங்கி, இரணியனுக் கிணங்கி, "தந்தையே! இருப்பான்," என்றான். உடனே இரணியன் தன் உடைவாளை உருவியெடுத்துக்கொண்டு பிரகலாதனுக்குக் காட்டி, "அடே பயலே! இதோ பார், அந் நாராயணன் என்கின்றவன் இத் தூணின்கண் இரானாயின் இந் நிமிடமே உனை இந்த உடைவாளுக்கு உணவாக்குவேன்," என்று யாவரும் நடுங்கவாயறைந்து, உடைவாளினால் அத் தூணையும் ஓர் அறை அறைந்தான்.

அறைந்த நிமிடமே அத்தூண் படீரென வெடிக்க, அதினின்றும் மேற் பாதி சிங்கமும் கீழ்ப் பாதி மனிதனும், கொள்ளிக் கண்களும், கோரைப் பற்களும், திறந்த வாயும், எண்ணிறந்த கரங்களும் கொண்ட நரசிங்கம் ஒன்று இரணியன்முன் தோன்றி நின்றது. அதைக் கண்ட இரணியன், "ஓஹோ! நீதானோ நாராயணன்! என் தம்பியைக் கொன்ற பாதகனோ நீ,!" என்று வாளை ஓச்சினான். பிரகலாதன் பிதாவின் கையைப் பிடித்துக் கொண்டு, "எனைப் பெற்ற தந்தையே! நாராயணனாகிய இந்த நரசிங்க மூர்த்தியை இப்போதாவது பச்சாத்தாபப்பட்டுப் பணிந்து வணங்கி தொழுது, உச்சிவித்து எண்ணிறந்த காலம் எல்லா உலகங்களையும் சட்டியாண்டு கடைத்தேறிப் போகலாம்; அடியேன் சொல்லை அசட்டை பண்ணாதேயும்," என்று அழுதுகொண்டு அபாய்ச சொல்லி நின்றான். இதைக் கேட்ட இரணியன், "அடே, அசட்டுப் பயலே! இதோ இந்த மாயவேஷக்காரனை உடனே மாய்த்து உன்னையும்

ஒரே வெட்டில் தீர்த்துவிடுகின்றேன், பாரடா," என்று வாளை நரசிங்கத்தின்மேல் வீசினான். அத் தருணம் சூரியனும் அத்தமித்தது. நரசிங்கமும் இரணியன் தன் வாளோங்கிய கையைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் வாசற்படியின்மேற் காலூன்றித் தனது தொடைகளின் மேல் அவனைத் தள்ளித் தன் கூரிய நகங்களால் அவனுடலைப் பிளந்து கொன்றது. பிரகலாதன் நரசிங்கமாகிய நாராயணனருகிற் சென்று அடியற்ற மரம்போல் கால்களில் விழுந்து, —

'புண்ணியப் வுருவே! புகழ்ந்தோர் வாழ்வே
'பண்ணிய டயிரிற் புண்ணியந் தெரியும்.'
அருமைத் தவத்தால் அண்டம் யாவும்
பெருமை யுடனே பிதாமகன் முதலாம்
தேவர் முனிவர் தைத்தியர் நாகர்
யாவரும் போற்ற வியற்றின னரசு.
நானெனு மகந்தை நண்ணின தவன்மனம்.
ஏனோ விவ்வா றழிந்தனன் எந்தை!
கருணைக் கடலே! கழல்பணிந் தேனென்!
கருணை காட்டிக் காக்கவென் றந்தையை!
ஓங்கா ரந்தனி லொளிக்கு மொளியே!
ஆங்கா ரந்தனை யகற்றி, யடியனை,
நினையே நினைந்து நின்பதம் பணிந்து
எனைநான் மறந்து யாவுந் துறந்து
மீளா வாளாய் மேற்படச் செய்து
தாளா முயர்பதந் தந்தருள் வாயே! —

என்று ஏத்தி, கூப்பிய காமும் தாழ்த்திய சிரமுமாய் எழுந்து நின்றான்.

பிரகலாதாழ்வான் பொருட்டு நரசிங்கமாய் வந்த நாராயணன் இரணிய குமாரனை நோக்கி, "என் அப்பனே! நின் வேண்டுகோளுக் கிணங்கி உனது தந்தைக்கு மன்னிப்பளித்து மனமகிழ்ச்சி கொடுத்தோம். இனி நீ அவன் அரசாட்சியைப் பெற்று அனைவர் அன்புக்கும் பாத்திரனாய்ச் செங்கோலோச்சிச் சிரஞ்சீவியாய் வாழ்வாயாக," வென் றருளிச் செய்து வைகுண்ட மேகினர்.

Printed at the "Aurora Press," Madras — 1927 (B).